# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை


## இங்கிலாந்தின் புதிய பிரதமர்



## எர்வர்டு ஹீத்


விலை 20 காசு

28—6—70

# பயிற்று மொழி எது?

மலையமான்

தமிழகத்தின் படித்த கூட்டத்தினரிடமிருந்து ஒரு பேரிரைச்சல் கேட்கிறது.

'தி.மு.க. அரசு' விவரந்தெரியாமல்' கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குகிறது. தி. மு. க. அரசின் மொழிவெறிதான் இதற்குக் காரணம். கல்லூரிகளில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக வைத்துக் கொள்ளாமல் அகற்றுவது தற்கொலைக்கொப்பானதாகும் என்று படித்த மேட்டுக் குடியினர் ஓலமிடுகின்றனர்.

முன்னே சில காலம் "தமிழால் பாடங்களைக் கற்பிக்க முடியுமா?" என்று கேட்டு வந்தார்கள். முதலில் வரலாறு, நிலநூல் போன்ற பாடங்களை உயர்நிலைப் பள்ளியில்கூட கற்பிக்க இயலாது என்று வாதிட்டவர்கள் உண்டு. உயர்நிலைப் பள்ளி அளவில் இன்றைக்கு எல்லாப் பாடங்களும் தமிழால் நடக்கின்றன.

'உயர்நிலைப் பள்ளிகளில் முடியும். கல்லூரிகளில் அது முடியுமா?' —என்று கேள்வியைச் சிறிது மாற்றிக்கேட்டு—வந்தார்கள். கல்லூரிகளிலும் முடியும் என்று அங்கும் வேலை தொடங்கக் கண்டு இப்போது வேறு பல்லவி பாடுகிறார்கள்

'தமிழால் படித்தால் ஆங்கிலம் தெரியாது; ஆங்கிலம் தெரிந்திராவிட்டால் இந்தியாவின் வெளி மாநிலங்களில் வேலை தேடும் வாய்ப்பு இல்லை—என்கிறார்கள்.

இந்தக்கூற்றினை மேம்போக்காகப் பார்க்கிற எவரும் முதலில் உண்மை தானே' என்கிற முடிவைத்தான் மேற்கொள்வர். வேறு வகையில் சிந்திக்கத் தயக்கம் கொள்வர். அத்தகைய தயக்கம் கொள்வாருக்குத்தான் இந்த விளக்கத்தைப் படைக்கிறோம்.

முதலில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஒருவர் ஒரு மொழியில் அறிவு பெற்றிருப்பதற்கும் தொடர்பே இல்லை.

மேலும் இந்தியாவைப் பொறுத்த வரை, அந்தந்த மாநிலத்திலேயே அந்தந்த மாநிலத்து மொழியையும் ஆங்கிலத்தையும் ஒருசேரக்கற்றவர்களே வேலையின்றி வாடுகிற காலம் இது! ஒரு மாநில அரசின் வேலை வாய்ப்புகள் வேற்று மாநிலத்தவருக்குத் தரப்பட வேண்டுமென்ற நியாயமில்லை. இந்தியாவின் எந்த மாநிலமும் வேலைகளை மிகுதியாக வைத்துக்கொண்டு ஆங்கில அறிவு படைத்தவர்கள் வேண்டுமென்று விளம்பரப்படுத்தி — கிடைக்காமல் அழுதுகொண்டில்லை. இனி எதிர்காலத்தில் அப்படி அழுவார்கள்; நாம்தான் போய் கண் துடைத்துவிட்டு உதவவேண்டும் என்கிற நிலை உருவாகப் போவதாகவும் தெரியவில்லை.

கூலி வேலைக்காகவும் செருப்புத் துடைத்து வயிறு பிழைப்பதற்காகவும், உணவு விடுதிகளில் வேலை செய்து உயிர்வாழ்வதற்காகவும் அண்டையிலே உள்ள பம்பாய்க்குப் போனவர்கள் இன்றைக்குச் சிவசேனையினரிடம் படும்பாட்டை எண்ணிப்பார்த்தால் அண்டை மாநிலங்களில் வேலைவாய்ப்புக் கெட்டுப்போகிறதே என்று தமிழகத்துச் "சாய்வு நாற்காலிகள்" கிறீச்சிடமாட்டா!

இது இந்திய மண்ணுக்குள்ளாக வளர்ந்துவரும் நிலை. இனி வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப்பயன்படுத்த ஏற்கனவே சென்றிருந்தோர் நிலைமையை எடுத்துக்கொள்ளுங்கள். பர்மா, சிங்கப்பூர், இலங்கை போன்ற இடங்களுக்குச் சென்றவர்கள் எத்தனை வேகமாகவும் இரக்கப்பட்டத்தக்க வகையிலும் திரும்ப அனுப்பப்படுகின்றனர் என்பதனையும் திரும்ப வருவோருக்குப் புது வாழ்வளிக்க இந்திய அரசும் மற்ற மாநில அரசுகளும் என்ன பாடுபட வேண்டியிருக்கிறது என்பதனையும் ஆங்கில அறிவின்மையால் உலகெங்கும் உள்ள வேலை வாய்ப்புக்கள் நம்மைவிட்டு நீங்கிவிடும் என்று அஞ்சி அழுது ஓலமிடும் மேட்டுக் குடியினர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அப்படியே வெளிநாடுகளில் வேலைக்கு வாய்ப்புக் கிடைப்பதானாலும் அது தனிப்பட்ட வேலைத் திறமையைக் கருதியே வரும் வாய்ப்பாக இனி இருக்காது.

அப்படிப் பார்க்கிறபோது நம்முடைய மாணாக்கரிடையே தொழில் திறமை—நுண்ணறிவை நாம்வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்தத் திறமையும் நுண்ணறிவும் ஒரு மாணாக்கனுக்குத் தன் தாய் மொழியில் பயில்வதால் தங்கு தடையின்றி வளரும்; வேறொரு மொழியால் பயில்வதைவிட தாய் மொழியிலே பயில்வதுதான் உயர்வானது—பொருத்தமானது— முறையானது என்பதை எல்லாக் கல்வியாளர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

எந்தநிலைக் கல்வியாக இருந்தாலும் ஒருவர் தன் தாய்மொழியில் பயில்வதே சிறந்தது என்ற கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்து அரசால் வகுக்கப்பட்டதல்ல! கல்வியாளர்கள், உளநூல் அறிஞர்கள்—ஆராய்ச்சி வல்லவர்கள் வகுத்துத் தந்தது. எனவேதான் சிறிது சிறிதாகக் கல்வி நிலையங்களில் தமிழ் பயிற்று மொழியாக்கப்படுகிறது.

ஆனாலும் ஆங்கிலத்தின் தேவையையும் அருமை பெருமைகளையும் அதில் தமிழர்க்கும் தமிழ் மாணாக்கர்க்கும் பயிற்சி வேண்டும் என்ப

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 28—6—70 | இதழ் 50

# ஐயோ, துர்க்காபூரே!

இந்தியத் துணைக்கண்டத்தை, கடன் சுமையால் கூனச் செய்துகொண்டிருப்பனவற்றுக்குத் தலைமை வகிப்பனவாக விருந்துகொண்டிருக்கும் சில தொழில் திட்டங்களில் பொகாரோ, பிலாய், துர்க்காபூர். ரூர்கேலா போன்றவைகளும் சிலவாகும்.

இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் மேற்கண்ட திட்டங்களின் விஸ்தரிப்புக்காக வென்று ரூ. 1450 கோடியை ஒதுக்கி இருக்கிறார்கள்.

இவைகளெல்லாம் இந்தியத் துணைக்கண்டத்தைப் பெரிய தொழில் வளமிக்கதாக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தினாலே ஏற்படுத்தப்பட்டவைகள் தான்,

மற்றவைகள் ஒருபுறமிருந்தாலும், துர்க்காபூர் உருக்காலையில் கடந்த சில மாதங்களாகவே தொழில் தகராறு ஏற்பட்டு வந்திருக்கிறது, இந்தத் தகராறுக்கு இலக்காகி இருக்கும் துர்க்காபூர் ஆலைக்கு மட்டும் இந்தத் திட்டத்தின் விஸ்தரிப்புக்காக ரூ. 374 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள்,

நாட்டை வளங்கொழிக்கச் செய்யப்போகிறோம் என்ற பெரிய பேரிரைச்சலோடு, மக்கள் மீது சுமக்க முடியாத அளவு வரிகளைப் போட்டும், வெளிநாடுகளிலேயெல்லாம் மானத்தை விட்டு கை நீட்டி கடன் பெற்றும் கொண்டுவந்து குவிக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்களை, தொழில் தகராறு என்பதன் பேரால் பாழாக்கிக்கொண்டிருப்பது என்றால், இது ஆரோக்கியமான ஒரு நடைமுறை என்று, பைத்தியக்காரன்கூட ஒப்புக்கொள்ள மாட்டான்.

துர்க்காபூரிலே இப்போது அதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அரசுத் துறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் அந்த ஆலையை இழுத்து மூடிவிட வேண்டியிருக்கும் என்று அரசினரே அறிவிப்புக் கொடுக்கவேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது என்றால், பிரச்னையை சாதாரணமானதாகக் கருதிவிட முடியாது.

தொழில் தகராறுகளின் பிறப்புக்கள் எதன் காரணமாக ஏற்படுகின்றன என்பதற்குக் குழு அமைத்துக் கண்டு பிடிக்கவேண்டிய அவசியமில்லை!

தொழிலாளர்களது வாழ்வு, நைந்துகொண்டிருக்கும்போது, தாம் தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனத்திலிருந்து அவற்றுக்கு ஓரளவு நிவாரணம் எதிர்பார்ப்பது என்பது பாவகரமான காரியமல்ல—கூடாததுமல்ல,

ஆனால் எதிர்பார்ப்புக்களின் எதிரொலிகள் நிறுவனத்தையே மூடிவிடுவது என்கிற அளவுக்குச் செல்லும் போதுதான் பிரச்னைகள், தகராறுகளாகி விடுகின்றன.

ஒட்டு மொத்தமாக உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலுமே, தொழிலாளர்களது வாழ்வு, வளமைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே முன்னுரிமை நல்கப்படுகிறது என்பதுடன், பெரும் அக்கறையும் காட்டப்படுகிறது என்பதுதான் இன்றுள்ள நிலை.

பொதுவான தன்மையில், மனித தேவைகள் அனைத்துமே நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அந்த வளர்ச்சிக்கு மனிதனும் தன்னை ஒப்படைத்துக்கொள்ள வேண்டியவனாகவே இருக்கிறான்,

எனவேதான் பிரச்னைகள் பல்கிப் பெருகுகின்றன.

இந்நிலையில் துர்க்காபூர் பற்றிக் கிடைத்திருக்கிற செய்திகள் பெரும் வருத்தத்தைத் தரத்தக்கதாக ஆகி இருக்கிறது.

தகராறு நிலைமைகள் காரணமாக இந்த ஆலையின் உற்பத்தி மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துவிட்டது என்று அறிவிக்கப்பெற்றிருப்பதுடன், ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் மாதம் ஒன்றுக்கு 1·7 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

வளவாழ்வுக்கு வசதி வேண்டும் என்ற கோரிக்கையில் இருக்கின்ற நியாயம், அதனை வழங்குகின்ற நிறுவனமும், அதனைத் தரத்தக்க அளவுக்கு உயர்த்தப்படவேண்டும் என்பது நியாயமற்றுப் போய்விடாது.

இவை நியாயமென்று ஏற்றுக் கொள்ளப்பட்டால், எந்தவொரு நிறுவனத்திலும், தகராறுகள் காரணமாக உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படுத்தப்படுவது அனுமதிக்கப்பட முடியாததாகும்.

துர்க்காபூரிலே இந்த அனுமதிக்கப்பட முடியாத குற்றம் இழைக்கப்பட்டிருக்கிறது,

யாரோ சிலரது தூண்டுதல்கள் காரணமாக இந்த குழப்ப நிலை இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. அந்த குழப்பவாதிகளது அச்சுறுத்தல் காரணமாக 80 சதவீதத்தினர், பயந்துகொண்டு, தகராறில் பங்கு கொண்டுள்ளனர் என்றும் கூறுகிறது அரசு.

இந்த குழப்பவாதிகளை 'சஸ்பெண்டு' செய்து வெளியே அனுப்பிவிட்டால், அமைதி நிலையை உண்டாக்க முடியுமென்றும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளபோதிலும், நிலைமை பூரணமாக சீர் செய்யப்பட முடியவில்லையென்றால், மூடத்தான் வேண்டியிருக்கும் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

முடக்கி வைத்திருக்கின்ற ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நாசமாக்கப்படுவது ஒருபுறமிருக்கட்டும்.

தொழில் வளர்ச்சி நிலை தேக்கத்திலிருந்துகொண்டிருக்கும் ஒரு சூழ் நிலையில், இது விரும்பத்தக்கதா என்பதை, தகராறுக்குரிய இருதரப்பாருமே சிந்திக்க வேண்டும். பொதுத்திட்டங்களில், பொதுநலனுக்குத்தான் முக்கியத்துவம் நல்கப்பட வேண்டும் என்பதை தொடர்புடையவர்கள் உணர்ந்து கொண்டால்தான் நாட்டுக்கு அது நல்லதாக இருக்கும்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

தனையும் தி. மு. க. அரசு உணர்ந்திருக்கிறது.

ஆங்கில அறிவு வேண்டும் என்பதற்காக எல்லாப்பாடங்களையுமே ஆங்கிலத்தில் பயிலவேண்டும் என்பதுதான் பொருந்தாத வாதம்! ஆங்கிலம் இன்றைக்கு மூன்றும் வகுப்பிலே இருந்து பட்டப்படிப்பு முடியும் வரை பதின்மூன்று ஆண்டுகள் இடைவிடாமல் ஆங்கிலம் தற்போதைய திட்டத்தின்கீழ் ஒரு மாணவருக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தப் பதின்மூன்று ஆண்டுகளில் ஒரு மாணவர் ஒரு மொழியைப் படிக்கவும் எழுதவும் பேசவும் பயில இயலாது—கல்லூரியில் எல்லாப் பாடங்களையுமே ஆங்கிலத்தில் பயிற்றுவித்தால்தான் இயலும் என்கிற வாதம் அதனைச் செய்வோருக்கே நன்றாயிருக்கிறதா?

பிள்ளைப் பருவத்திலே தொடங்கி பதின்மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படித்தும் ஒருவர் ஒரு மொழியைப் பயில இயலாது என்றால் அவரைச் சேர்த்திருக்க வேண்டிய இடம் பள்ளியும், கல்லூரியும் அல்ல என்பதனை ஊகிக்க வெகுநேரம் பிடிக்காது.

அது நிற்க, தமிழ் வாழவேண்டும்—தமிழர் வாழவேண்டும் என்ற நோக்கங்களை நிறைவேற்றப் பிறந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அது தமிழுக்கு எங்கும் எப்போதும் முதலிடம் கொடுப்பதற்காகவெட்கப்படப் போவதில்லை. வளர்ந்துவரும் மக்கள் தொகையினைக்கொண்டு பார்க்கும்போது தீர்க்கமுடியாத திண்டாட்டம் வேலையில்லாத் திண்டாட்டம்என்பதனை அறியலாம். அப்படியிருக்க அதனை ஒரு அரசு தன் மொழிக்கு ஆற்றவேண்டிய கடமைக்கும் தொடர்பு படுத்துவது "புத்திசாலிகள் செய்யும் புரட்டு" என்று ஆகுமே தவிர நிலையுணர்ந்த வாதமாகாது!

இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலத்திலே புலி என்று பெயர்பெற்ற பல பெரியவர்களை இந்தத் தமிழ் மக்கள் அறிவார்கள். அவர்களெல்லாம்வேலைதேடிவெளிநாடுகளுக்குப் போய்விடவில்லை. இந்த நாட்டிலே இருந்து கொண்டுதான் பேரும் புகழும் பெருஞ்செல்வமும் திரட்டினார்கள் என்பதனை இந்திய மண்ணுக்குக் கப்பல் கப்பலாக வந்திறங்குவோரைப் பார்த்தால் இன்றைக்கும் தெரிந்து கொள்ளலாம்!

ஆங்கிலம் படித்தவர்கள் என்பதற்காக இன்றைய உலக நாடுகளில் எந்த நாடும் வேற்று நாட்டு மக்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்க ஆயத்தமாயில்லை

ஆங்கில மொழியை அகிலத்துக்கே அளித்த பிரிட்டனில்கூட, இப்போது நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல், இதனைப் புலப்படுத்திக் காட்டியிருக்கிறது. இன ஒதுக்கல் என்ற கொள்கையின் கீழ் இங்கிலாந்திலிருப்போர் எவராயினும், அவர் ஆங்கிலம்அறிந்தோராக இருந்தாலும்கூட, வெளியேற்றப்பட வேண்டும் என்று தேர்தல் தீர்ப்பளித்திருக்கிறது. எனவே, எதையாவது சொல்லித் தாய் நாட்டுக்கு விரட்டிவிடவே ஒவ்வொரு நாடும் முனைப்பாயிருக்கிறது. ஆங்கிலம் இருக்கட்டும் அந்தந்த நாட்டு மொழியைப் பேச எழுதக் கற்றவர்களைக்கூடக் கப்பலேற்றி அனுப்பி விடுவதைப் பார்க்கிறோம்—அந்த நாட்டுக்குச் சொந்தமில்லாதவர்களை!

நிலைமைகள் மாறிவருவதை ஆராயாமல்—சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு மாயகண்ணாடியில் பார்த்து, ஆங்கிலத்துக்கும் வேலைவாய்ப்புக்கும் முடிச்சுப் போட எண்ணுவது பொருந்துமா?—எண்ணிப்பார்க்கவேண்டும்!

இந்திய மாநிலங்களில் பெரும்பாலும் எல்லா அரசு வேலைகளிலும் இந்தி நுழைக்கப்படுகிறது, இந்திய அரசு தன் எல்லா அமைச்சகங்களிலும்—தி. மு. க.வைத் தவிர வேறு தடை எதுவுமின்றி—இந்தியை நுழைக்கும் முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகிறது, ஆங்கிலத்தை இந்திய அரசு ஒதுக்கி வருவது நடைமுறை உண்மை. ஏற்கனவே ஆங்கிலம் தெரிந்துகொண்டு வேலையில் இருப்பவர்களை 'இந்தி படித்துக் கொண்டால் தான் ஆயிற்று' என்று மிரட்டிச் செயல்கள் ஆற்றி வருவதையும் நாடறியும்.

இந்த நிலையில் மொழிப் பாடமாக ஆங்கிலம் பயில்வதோடு, மற்ற பாடங்களைத் தாய்மொழியில் பயின்று சிறிது விவரம் தெரிந்த படிப்பாளிகளாக—வேற்று மொழியில் உருப்போட்ட படிப்பாளிகளாக இல்லாமல்—தமிழர்கள் விளங்கத் தமிழில் பாடங்கள் பயில்வது முற்றிலும் முறையானதே ஆகும்!

தாய்மொழியில் மாணவர் கல்வி பெறுவது சிறப்பானது என்பது அரசியலுக்காகச் சொல்லப்படும் புரட்டு அல்ல. கல்வியாளர்கள், உளநூல் மொழிநூல் அறிஞர்கள் ஆய்ந்து கண்ட உண்மை. அந்த உண்மையினை அடித்தளமாகக் கொண்டு எழுப்பப்பட்ட கொள்கைதான் 'தமிழ்ப் பயிற்று மொழி' கொள்கையே தவிர, சிலர் தங்களை மட்டும் பரந்த மனம் படைத்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு குறிப்பிடுவதைப் போல 'தமிழ் வெறியால்' விளைந்தது அல்லவே அல்ல!

ஒரு காலம் இருந்தது. ஆங்கிலம் தெரிந்தால் உலகெங்கும் வேலைக்குப் போகலாம் என்று! இப்போது ஆங்கிலம் தெரிந்தால் என்ன இன்னொன்று தெரிந்திருந்தால் என்ன 'விரட்டு—விரட்டு – திரும்ப அவனுடைய நாட்டுக்கே விரட்டு!' என்கிறவர்கள் மிகுந்து வருகிற உலகமாக இது மாறி வருகிறது, எனவே ஆங்கிலத்துக்கும் வேலை வாய்ப்புக்கும் தொடர்பு அற்று வருகிறது என்பதையும்,

பதின்மூன்று ஆண்டுக் காலம் ஒரு மாணவர் ஆங்கில மொழியை வெறும் மொழிப் பாடமாக மட்டும் பயின்றால் அதில் தேர்ச்சி பெற முடியாதா என்பதையும் நல்லோர் எண்ணிப்பார்த்திட வேண்டுகிறோம்.

அப்படிப் பதின்மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பயின்றும் கற்க இயலாதமொழியைக் கொண்டு பிற பாடங்களைப் பயிற்றுவித்தால் அந்த பாடங்களை அத்தகைய மாணவர்கள் எந்த விதமாகப் புரிந்துகொள் முடியும் என்கிற கேள்விக்கும் விடை தேடுமாறு வேண்டுகிறோம்.

---

## இலட்சிய கிராமம்

சோஷலிச இலட்சியங்களை நடைமுறையில் நிறைவேற்றி வரும் இலட்சிய கிராமமாக ஷியாபூர் என்ற கிராமம் திகழ்கிறது.

இந்தக் கிராமத்தில் 700 மக்கள் வசிக்கின்றனர்; இக்கிராமத்தில் தோண்டப்பட்டுள்ள குழாய்க் கிணற்றை எல்லா மக்களும் சாதி மத வேற்றுமையின்றிப் பாசனத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

தீண்டாமை...திருட்டுக்கள் போன்ற சமூகத் தீமைகள் இக்கிராமத்தில் மருந்துக்குக்கூட இல்லை; பல்வேறு மதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

ஊராட்சித் தேர்தல்களில் உறுப்பினர்கள் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தம்பி

எந்தப் பண்புக்கும் குறிக்கோளுக்கும் நான் தனியான பொருளைக் கொள்வதில்லை. அதனை ஆங்கிலத்திலே சொல்வதானால் எந்த வார்த்தைக்கும் (அப்சொல்யூட்) நிலைத்த —தீர்மானித்த—பொருள் அதற்கே உள்ள பொருள் என்று நான் கொள்ளுவதில்லை—எதற்கும் அது எதனோடு தொடர்புபடுத்தப்படுகிறதோ — (ரெலடிவ்) — அதைக் கொண்டுதான் பொருள் தருவதும் — அதைக் கையாள்வதும் பழக்கமாக இருக்கிறது, ஏன் என்றால் தமிழர்களுக்கு மட்டும் அல்ல — உலகத்திலே உள்ள நல்லறிவு படைத்த எந்த இனத்தாருக்கும் சிலபல பொதுக் கருத்துக்கள் நீண்ட பல காலமாக தரப்பட்டு வந்திருக்கின்றன. அழகு, வாய்மை அறிவுடைமை, பொறுமை, இப்படி இருக்கிற பண்புகள் அத்தனையும் எல்லா நாடுகளிலேயும் — கிரேக்க நாட்டிலே சாக்ரடீஸ் காலமானாலும் சரி — தமிழகத்திலே வள்ளுவப் பெருந்தகை காலமானாலும் சரி — எந்த நாட்டிலே பிறந்த பேரறிவாளர் காலமானாலும் சரி — சிலபொதுக் கருத்துக்கள் தரப்பட்டு வந்தன. அவைகளுக்குக் கால மாறுதலுக்கு ஏற்றபடியும், உலகத்தின் சூழ்நிலைக்கு ஏற்றபடியும் அது எதனுடன் தொடர்புபடுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்தும் அதற்கு முழுப் பொருளைக் கண்டு பிடிக்க முடிகின்றது.

அப்படிக் கண்டுபிடிக்கக் கண்டு பிடிக்கத்தான் அதன் உள்ளே புதைந்து கிடக்கின்ற முழு உண்மைகள் தெரியப்படக் கிடைக்கும்,

தமிழ் மக்கள் தங்களுக்கென இருக்கிற சிறந்த பண்புகளை இன்றைய தினம் அறிந்து அவைகளைத் தங்களுக்கு உரியது ஆக்கிக்கொண்டு அதிலே பயிற்சிபெறுவதற்கு மிகச் சிறந்த முறையிலே முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள், எவ்வளவுதான் தமிழர்கள் அழுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் எத்தனை துறைகளிலேதான் அவர்கள் பின் தள்ளப்பட்டிருந்தாலும் இந்தப் பதினைந்து, இருபதாண்டுக் காதத்தில்—இருபதாண்டு காலத்திலே என்று சொல்வதைவிட எனக்கு இப்புறத்திலே இருக்கிற நண்பர் கி. ஆ. பெ.வும் இந்தப் பக்கத்திலே இருக்கிற சாமி அருணகிரிநாதரும், காவி அணிந்த அந்தத் தமிழ்க் காவலரும் வெள்ளை ஆடை அணிந்த நம்முடைய வித்தகரும், என்போன்றவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அழைத்துக்கொண்டு தமிழ் நாட்டிலே உலா வந்து தமிழர்களுக்கு வந்துற்ற குறைபாடுகளை எல்லாம் நீக்கவேண்டும் என்று வீர உணர்ச்சியோடு போராடிய நாள்தொட்டு, நாளுக்குநாள் தமிழார்வம் நல்ல முறையிலே பரவிவருகிறது. எத்தனை தமிழ்ப் பகைவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டாலும், தமிழ்ப் பகைவர்கள் தங்கள் கரங்களிலே கிடைக்கிற எத்தனைப் படைகளைக்கொண்டு அழித்து ஒழிக்க முயன்றாலும், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கட்டம் தமிழர்களுடையபகைவர்கள் தங்களையும் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதற்குத் தயக்கமடையாமல் "எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொள்ளுகின்ற அந்தக்காலக்கட்டத்தில் இன்றைய தினம் தமிழர்கள் வந்துநிற்கின்றோம் — நாம். இந்த அளவுக்கு விரைவில் வளருவோம் என்று — காசி விசுவநாதர் ஆலயத்திற்கு முன்னாலே இருந்து நான்கைந்து காளையரும், இரண்டொரு

# அரசியலில் மாணவர்கள்!



கல்வி ஆண்டு தொடங்கிவிட்டது! மாணவர்களுக்கு ஒவ்வொரு கட்சியினரும் அன்பழைப்புவிடத் தொடங்கும் காலம் கனிந்துவிட்டது! அந்த மாணவர்களைப் பற்றிய தெளிவுரையை **பேரறிஞர் அண்ணா** அவர்கள் படம் போட்டுக் காட்டுகிறார்கள் இங்கே!

கன்னிமாரும், பத்துப் பதினைந்து தாய்மார்களும் வாழ்த்துக்கள் கூற, பெரியவர்கள் கதவோரத்திலே நின்று "ஐயோ பிள்ளைகள் அடிபடுவார்களோ" என்று ஆயாசப்பட போலீஸ்காரர்கள் இந்தத்தொல்லை நித்த நித்தமுமா என்று சலித்துக்கொள்ள ஊர்வலம் வந்தோமே, அந்த நாட்களிலே இவ்வளவு விரைவிலே முன்னேறுவோம் என்று எண்ணிப் பார்த்ததில்லை. மாணவர் மன்றம் மட்டும் அல்ல—தமிழர்கள் மனம் கூட இந்த அளவுக்கு விரிவடையும் என்று நாங்கள் எண்ணியது இல்லை, ஆனால் இன்றைய தினம் என்ன பார்க்கிறோம்? நான் இன்றைய தினம் இடம்பெற்றிருக்கிற சட்ட சபையில் நாளுக்கு நாள் உறுப்பினர் ஒருவர் தவறாமல் திருக்குறளை—தெரிந்து சில பேரும்—தெரியாமல் பலபேரும் — தெரியும் என்பதைக் காட்டிக்கொள்வதற்காகச் சிலபேரும் — தெரிந்தால்தான் தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று பலபேரும் நித்த நித்தம் எடுத்துச் சொல்வதைக் கேட்கிறோம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே சட்டமன்றத்திலே யாராவது ஒருவர் மேதை என்று தன்னை விளக்கிக்கொள்ளவேண்டும் என்றால் ஆப்ரகாம்லிங்கன் அப்படிச் சொன்னான், வாஷிங்டன் இப்படிச் சொன்னான், சர்ச்சில் பெருமகன் அப்படிச் சொன்னான், லாயிட் ஜார்ஜ் இப்படிப் பேசினார் என்றால்தான் ஆள்காட்டி விரலை மூக்கின்மீது வைத்து 'ஆகா இவனல்லவா அறிஞன்' லாயிட் ஜார்ஜை கவனப்படுத்துகிறான், வாஷிங்டனை எடுத்துக் காட்டுகிறான் ஆப்ரகாம் லிங்கனைத் துணைக்கழைக்கின்றான் என்று இவர்களைப்பற்றி முற்றும் உணராத காரணத்தாலே இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் குறைபடக் கூறினாலும், ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டார்கள்; பாராட்டினார்கள்; ஆச்சரியப்பட்டார்கள். இன்றைய தினம் அவர்கள் எல்லாம் அல்ல சட்டமன்றத்திலே துணைக்கழைக்கப்படுகின்றவர்கள் — சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற நேரத்தில், சங்க நூற்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன, பழந்தமிழ் முறைகள் எல்லாம் அலசப்படுகின்றன, கோனாட்சியிலே இருந்தாலும் குடியாட்சியைத் தழுவினான் மன்னன் என்பது காட்டப்படுகிறது, வள்ளுவப் பெருந்தகையினுடைய திருக்குறள் எடுத்துக்கையாளப்படுகிறது, இவைகள் மட்டுமல்ல—நம்முடைய மாநிலத்தின் நிதியமைச்சர், தம்முடைய வரவு செலவு திட்டத்தைத் தமிழிலே படித்துவிட்டு, அதற்காக அவர் தயாரித்த புத்தகத்தில் திரு, சுப்பிரமணியம் என்று போட்டிருந்ததை என்னுடைய கழகத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி அவர்கள் ஆர்வத்தோடு எழுந்திருந்து அவரைப் பாராட்டுகிற நேரத்தில் "நிதியமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன் — ஸ்ரீ என்பது தமிழர்க்கு உகந்ததல்ல, என்று நாங்கள் எல்லாம் எடுத்துச்சொன்ன காலத்தில் சீச்சி என்று எங்களை எல்லாம் இகழ்ந்த இவர், இன்றைய தினம் 'ஸ்ரீ' என்பதை விட்டுவிட்டு 'திரு' என்று போட்டதினாலே நான் அவரைப் பாராட்டுகிறேன்—என்று சொல்ல, உடனே ஓகோ இது கட்சிப் பிரச்னை ஆகிவிட்டதோ என்ற கலக்கத்திலே, சுப்பிரமணியம் அவர்கள் உடனே எழுந்திருந்து—"அன்பர் ஆசைத்தம்பி சொல்வதைப் போலல்ல, நான் இதற்கு இரண்டாண்டுக்கு முன்னாலேயே திரு என்றுதான் போட்டுக்கொண்டேன்" என்று பதிலளிக்க, ஆசைத்தம்பி அவர்கள் எழுந்திருந்து "நீதிக்கட்சியின் சார்பில் நாங்கள் நீண்டகாலமாகவே திரு என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்; அதனுடைய எதிரொலிதான் நீங்கள் திரு என்று போட்டுக்கொண்டது" என்று சொல்ல அது உண்மைதான் என்பதுபோல அந்த அறிஞர் அவையில் அவர் எங்களைப் பார்த்து ஒரு புன்னகையை பரிசாக அளித்தார்கள். இதிலே இருந்து அரசியல் நிலைமை எப்படியிருக்கிறது என்பதை உங்களுக்கு விளக்குவதற்கற்காகச் சொல்கிறேன் என்று நீங்கள் கருத வேண்டாம்.

என்னைப் பார்த்தும். என்னைப் போன்றவர்களைப் பார்த்தும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால், "நாங்கள் எல்லாம், சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, தடியடிக்கு ஆட்பட்டு உப்புச் சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்டு, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அண்ணாத்துரையும், அன்பழகனும், நெடுஞ்செழியனும் மற்றவர்களும் கல்லூரியில் உட்கார்ந்து பட்டப் படிப்புக்காகப் படித்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட அடிமை மனப்பான்மை படைத்தவர்களை நாடு ஏற்குமா? நாடு நம்பலாமா என்று இன்றையதினம் கேட்கிறார்கள். இன்றையதினம் மாணவர்கள் அரசிலில் ஈடுபடுதல் ஆகாது என்று அறிவுரையைத் தருகின்ற ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், அதே அறிவுரையை சொல்லாலே அல்ல, செயலாலே நாங்கள் நடத்திக் காட்டியதைப் பாராட்டவா செய்கின்றனர்? இல்லை.

அந்தக் காலத்திலே அரசியலில் நுழையாமல் அறிவு தேடும் நோக்கத்தோடும், கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், காட்டுக் கூச்சல்போலக் காட்சியளிக்கக் கூடிய அரசியலில் நுழையக்கூடாது எனறும் ஒதுங்கி இருந்த எங்களைப் பாராட்டாமல் நாங்கள் எல்லாம் அடிமை மனப்பான்மையால் படித்துக்கொண்டிருந்ததாகச் சொன்னால், இதை இன்றைய தினம் கேட்டுக்கொண்டிருக்கின்ற மாணவ நண்பர்கள் நானோ அல்லது நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களோ எவ்வளவுதான் அவர்களுக்கு அறிவுரை தந்தாலும், நம்மையும் பிற்காலத்திலே அண்ணாத்துரையைத் தூற்றினது போலத் தூற்றினால் என்ன செய்வது என்று அவர்கள் அரசியலிலே நுழைகின்றார்களே தவிர, யாரும் அவர்களை அரசியலுக்கு இழுக்கவில்லை. ஆகையினாலே மாணவர்களுக்கு, அரசியலிலே இடம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை—நான் வேறோர் கூட்டத்தில் எடுத்துச் சொன்னபடி—நாம் நடத்துகின்ற அரசியல், மாணவர்களும் நுழையவேண்டிய அவசியத்தை உண்டாக்குகிறதா இல்லையா, என்பதுதான் பிரச்சினை. இது மாணவர்கள் தீர்க்கவேண்டிய பிரச்

சினை அல்ல. அரசியல் உலகத்திலே உள்ளவர்கள் தீர்க்கவேண்டிய பிரச்சினை. அரசியல் உலகத்திலே உள்ளவர்கள் சீரான முறையிலே ஆட்சியை நடத்தினால் தமிழ்ப் பண்பு கெடாத வகையில் ஆட்சியை நடத்தினால், தமிழருடைய முன்னேற்றத்தைத் தடுக்காத வகையிலே ஆட்சியை நடத்தினால் மாணவர்கள் தங்களுடைய பேராசிரியர்களுடைய காலடியில் அமர்ந்து பெரும் புலவர்கள் அளித்த ஏடுகளை எல்லாம் படித்து தமிழ்ப் பண்புகளை அறிந்து மனதில் வைத்து கல்வித் துறையிலே முன்னேறலாம்.

அமைச்சர், மாணவர்கள் அரசியலிலே நுழைதல் ஆகாது என்று அறிவுறுத்தியதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். நான் அரசியல் உலகத்திலே உள்ளவர்களுக்கு இன்றைய தினம் சொல்லிக்கொள்ளுவேன்—மாணவர்கள் நுழைதல் ஆகாது என்று நீங்கள் அறிவுரை தருவதைப் போலவே அரசியலை மாணவர்கள் வந்து நுழையத்தக்க அளவுக்கு அமளி உள்ளதாக ஆக்கிவிடாதீர்கள் என்று ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களை நான் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆனால் ஒன்று. ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் மாணவர்கள் அரசியலில் நுழையக்கூடாது என்ற பொதுக்கருத்தை வலியுறுத்திக் கொண்டு வருவதை நீதிக்கட்சியும் நீண்ட காலமாகவே வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் மாணவர்கள் அரசியலில் அதிகமான அளவுக்கு ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவது ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அமைச்சர்களுடைய உண்மை எண்ணமாக இருக்குமானால், நான் ஒன்றை அவர்களுக்குக் கவனப்படுத்துவேன். இரு திங்களுக்கு முன்னால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய கூட்டம் வடக்கே நடைபெற்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலிலே தோற்றுவிட்டதற்குக் காரணம், பொதுவாக வாலிபர்களும்—குறிப்பாக மாணவர்களும் காங்கிரசை ஆதரிக்காமல் விட்டதுதான் என்று பண்டித ஜவகர்லால் நேரு எடுத்துக் காட்டி—இனி காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வாலிபர்களை ஒன்று திரட்டவேண்டும்—மாணவர்களைக் காங்கிரசுக்குள்ளே அழைத்துக்கொண்டு வரவேண்டும், மாணவர்கள் பிரிவை காங்கிரசின் சார்பில் கல்லூரிகளில் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்களா இல்லையா என்பதை நெஞ்சிலே கைவைத்து ஆட்சியாளர்கள் சொல்லவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அந்தத் தீர்மானத்தை அ. இ. கா. க. ரத்து செய்கிற மறுநாள், நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் சார்பிலே சொல்லுகின்றேன்—என்னுடைய கழகத்தில் மாணவத் தோழர்கள் ஈடுபாடு கொள்ளத் தேவை இல்லை என்று நாங்களும் தீர்மானம் நிறைவேற்றுவோம். ஆனால் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியிலே ஈடுபாடுகொள்ள வேண்டும் என்று ஆயிரம் மைலுக்கு அப்பாலே தீர்மானத்தைப் போட்டுவிட்டு, மற்றோர் அவையிலே அந்தக் கட்சிக்கு அடங்கி ஆணையைச் சிரமேல் ஏற்று நடக்கவேண்டிய பொறுப்பிலே இருப்பவர்கள் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடுதல் ஆகாது என்பதை எடுத்துச் சொன்னால், அதற்குப் பொருள் என்ன கற்பிக்க முடிகின்றது என்று என்னால் யூகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த அவையிலே அறிஞர்கள் இருக்கிறார்கள்—ஆன்று அடங்கிய பெரியோர்கள் இருக்கிறார்கள்—ஆராய்ந்து பார்க்கத் தக்க விற்பன்னர்கள் இருக்கிறார்கள்—மாணவர்கள் அரசியலில் நுழைதல் ஆகாது என்று அமைச்சர் பெருமகனார் சொன்னது 100-க்கு 100 உண்மையாக இருக்குமானால், நடைமுறை உண்மையாக இருக்குமானால் அவர் சார்ந்திருக்கிற கட்சியிலே அப்படித்தீர்மானம் நிறைவேற்றக் காரணம் என்ன? தீர்மானத்தை அங்கே போட்டுவிட்டு இங்கே வந்து மாணவர்கள் அரசியலில் நுழைதல் ஆகாது என்று எடுத்துச்சொன்னால் அதில் பொருத்தம் எங்கிருந்து வருகிறது? என்பது குறித்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

இதிலே இருந்து மாணவர்களை கட்சி அரசியலுக்கு நான் அழைக்கிறேன் என்று கருதத் தேவை இல்லை. இப்படிப்பட்ட அரசியல் ஆகாது என்றுதான் வலியுறுத்துகின்றேன்.

மற்றும் ஒன்று, நீங்கள் எவ்வளவுதான் பூட்டித் தாளிட்டாலும் தென்றல் எப்படிச்சின்னத்துளை வழியாக உள்ளே நுழைந்துவிடுமோ, அதைப்போல் நீங்கள் வெறுத்து ஒதுக்கலாம் அரசியலை. ஆனால் அரசியல் உங்களைவெறுத்து ஒதுக்காது. அரசியல்என்பது ஆண்டவனுக்கு அடுத்தபடியான சக்தி படைத்தது. ஆண்டவனுக்கு அடுத்தபடியாகஎன்றுசொன்னதற்குக்காரணம் ஆண்டவனை எப்படிப் பலர் பல மாதிரிக் கோணங்களிலே இருந்து பார்த்ததாகப் பாவனை சொல்லுகின்றார்களோ, அதைப்போல அரசியலைப் பற்றியும் பலர் பல மாதிரி பாவனையில் பேசுகின்றார்கள்.

அவைகள் இன்றும் மிகுந்த சக்தி வாய்ந்தன. யாரும், ஒதுக்கிவிட முடியாது.

எனது மதிப்புக்குரிய நண்பர் கி. ஆ. பெ. வி. அவர்கள் உங்களை எல்லாம் தமிழார்வம் பெறச் சொன்னார். சொல்லுகின்ற நேரத்திலேயே அவர் ஒரு 5 நிமிடத்திற்கு ஒரு முறை என்ன எடுத்துச் சொன்னார்? பேசுகின்ற முறையிலே தமிழ் எழுதவேண்டும் என்று சொன்னால், 'யார் பேசுவதைப் போல்?' என்று கேளுங்கள் என்று சொன்னாரல்லவா? — யாரைக் கேட்பீர்கள்? கேட்பதுதான் அரசியல். வேறு ஒன்றுமல்ல. இருக்கிற சிக்கல்களை விளக்கி அந்தச் சிக்கல்களை நீக்கவேண்டுமென்று நீங்கள் எங்காவது கேட்டால் அது அரசியலாகும். ஏன் என்றால் 10 பேர் ஒன்றாகக் கூடி ஒன்று வேண்டும் என்று கேட்பதும் 8 பேர் கூடி வேண்டாம் என்பதும்—இந்த இரண்டுக்கும் இடையிலே ஏற்படுகின்ற கருத்து மோதுதலுந்தான் அரசியலே தவிர, அது பஞ்சமா பாதகத்திலே ஏதோ துரதிர்ஷ்டவசமாகச் சேர்க்கப்படாமல் இருக்கின்ற ஒன்றல்ல.

## காகித நாற்காலி!

உலோகத்திற்கு இணையான உறுதியுள்ள—புதுமையான காகிதத்தை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு விஞ்ஞானிகள் உருவாகியுள்ளனர். இந்த காகிதத்தைக் கிழிக்க முடியாது. மெல்லிய கண்ணாடி இழை நூலை இணைத்து, இக்காகிதத்தைத் தயாரிக்கிறார்கள். ஒரு மில்லி மீட்டரில் நூறில் ஒரு பங்கு அளவுக்கு இந்நூல் இருக்கும். இந்தக் காகிதத்தை பயன்படுத்தி நாற்காலி செய்யலாம். சாதாரண மரம் போல உளுத்துப்போகாது. மாறுபட்ட கால நிலைகளுக்கு ஈடு கொடுக்கும். காகித நாற்காலி வேண்டாம் என்றால் நெருப்பில்போட்டு எரித்து விடலாம்.

அதைச் சொல்லுகின்ற அத்தனைப் பேரும் ஒன்று அரசியலிலே இருந்துகொண்டு மாணவர்கள் தங்களுக்குப் பயன்படவில்லையே என்ற பெருமூச்சை அடிப்படையாக வைத்துப் பேசுகின்றவர்கள், மற்றும் சிலர் அரசியலிலே இருந்துவிட்டு அலுப்பினாலேயோ வெறுப்பினாலேயோ கோபத்தினாலேயோ தாபத்தினாலேயோ அரசியலை விட்டு வெளியே சென்றவர்கள். மற்றுஞ் சிலர் இன்னார் இருக்கின்றவரையில் அரசியலில் எனக்கு இடமில்லை. நான் வரமாட்டேன் என்று கருதிக் கொண்டிருப்பவர்கள்.

இன்னுஞ் சிலபேர் அண்ணாத்துரையைப் போன்றவர்களை நான் அனுப்பியிருக்கிறேன் என்று விசுவநாதத்தைப் போன்றவர்கள் பெருமையோடு சொல்லிக் கொண்டிருப்பார்கள். இப்படி எந்த வகையிலே ஒதுங்கி இருந்தாலும் யாரும் அரசியல் தொடர்பிலிருந்து விலகி விட்டவர்கள் அல்ல, ஆகையினாலே அரசியலிலே மாணவன் கலக்கலாமா வேண்டாமா என்பதல்ல இன்றையதினம் பிரச்சினை.

அரசியல் மாணவர்களை இழுக்கத்தக்க அளவுக்கு அமளி உள்ளதாக இருக்கலாமா என்பதுதான்,

பிரிட்டிஷ் நாட்டில் சாதாரணமாக மாணவர்கள் கட்சி அரசியலில் கலப்பதில்லை.

ஆனால் பிரிட்டனில் சூயஸ் பிரச்சினை ஏற்பட்டபோது பிரிட்டிஷ் கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாக நாசருக்கு அடங்கிப் போக வேண்டுமா அல்லது நாசரை ஒழித்துவிட்டு சூயஸ் கால்வாயைத் தங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டுமா என்ற பிரச்சினை வந்தபோது ஆக்ஸ்போர்டிலோ கேம்பிரிட்ஜிலோ படித்துக் கொண்டிருந்தவர்கள்—பொருளாதாரப் புத்தகத்தில் ஆறாவது அத்தியாயத்தில் 25-வது பக்கத்தில் 16-வது வரியில் என்ன இருக்கிறது என்று பேசிக் கொண்டிருக்கவில்லை, அந்தப் புத்தகத்தை ஒரு பக்கத்திலே வைத்துவிட்டு 'சூயஸ் ஆதிக்கம் பிரிட்டாஷாருக்கே' என்றார்கள், அவர்கள் எல்லாம் கல்வித் துறையிலே பின்தங்கியவர்கள் அல்ல. அவர்கள் எல்லாம் அரசியல் துறையிலேயும் பின்தங்கியவர்கள் அல்ல. நாட்டுக்கு உயிர் நாடியாக இருக்கிற பிரச்சினை எழுகின்ற நேரத்தில் அரசியலில் தலையிடத்தான் செய்வார்கள்.

சில நாட்களுக்கு முன்என்று நான் கருதுகின்றேன்—அஸ்ஸாம் மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை அசாமிலே வைப்பதா? பீகாரிலே வைப்பதா என்ற பிரச்சினை வந்து. டெல்லியிலே உள்ள ஆட்சிப் பொறுப்பினர் பீகாரில்தான் வைப்போம் என்று பிடிவாதம் செய்ததால் அசாம் மாநிலத்திலே உள்ள மாணவர்கள் அத்தனைப் பேரும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல்ஊர்வலம் வந்து அசாமில்தான் எண்ணெய்க் கிணறு இருக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். அமைச்சர் சுபபிரமணியத்தின் அகராதிப்படி பார்த்தால் அவர்கள் மாணவர்கள் அல்ல!

ஆனால் பாலகங்காதர திலகர் மகாத்மா காந்தி பண்டித மோதிலால் நேரு ஜவகர்லால் நேரு பெருங்கவி சுப்பிரமணிய பாரதியார் இவர்களின் அகராதிப்படி பார்த்தால் அவர்கள் எல்லாம் நாட்டுப் பற்று உடையவர்கள். ஆகையினாலே இன்றையதினம் நாட்டுப் பற்று நாசமாக்கப்படுகின்ற செயல்களை ஆட்சியாளர்கள் செய்யாமல் இருந்தால்—மாணவர்கள் உண்மையிலேயே கல்வித் துறையிலே கவனத்தைச் செலுத்துவார்கள். இரண்டாவது, மாணவர்களுக்குத் தரப்படுகின்ற கல்வியிலேயே அரசியல் இருக்கிறது. இல்லை என்று சொல்பவர் யார்? இன்றையதினம் நம்முடைய பெரும்புலவர் அறிஞர் வரதராசனார் அவர்கள் தமிழ் வகுப்பு நடத்துகின்றபோது அகத்தையோ புறத்தையோ கற்றுத் தருகின்ற நேரத்திலேயும் அவர்களாக அரசியல் புகுத்துவதில்லை, அவர்கள் எடுத்துக் காட்டுகின்ற பாடத்தில் அரசியல் இருக்கிறது. இல்லை என்று சொல்வது யார்? திருக்குறளிலே அரசியல் இருக்கிறது. பரிமேலழகர் உரை தேவையா இல்லையா? அரசியல் இருக்கிறது. எதில் அரசியல் இல்லை? அடுக்களையில் உட்காருகின்ற ஆரணங்கிலிருந்து—அகம் புறம் படிக்கின்ற மாணவர்கள்வரை அரசியல் அவர்களை நிழலைப் போலத் தொடரும். அவர்களை விட்டு விலகாது மக்களாட்சி என்றாலே அதுதானே பொருள்? மக்கள் ஆட்சி என்று சொல்லிவிட்டு மாணவர்களே! நீங்கள் அரசியலிலே கலந்து கொள்ளாதீர்கள் — பாடத்தைப் பற்றி மட்டும் எண்ணிக்கொண்டிருங்கள்—தொழிலாளர்களே! உற்பத்தியைப் பெருக்குங்கள்—முதலாளிகளே! புதிய தொழில்களை உண்டாக்குங்கள் — மாதர்களே! குடும்பத்தைப் பேணுங்கள்—குடும்பம் அதிகமாகிவிட்டால் குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்—என்று சமுதாயத்திலே இருக்கின்றவர்களிலேஒவ்வொரு பிரிவினரையும் தள்ளிவிட்டால் மிச்சம் அரசியலுக்கு யார் இருக்கிறார்கள் என்று பாருங்கள்!

இப்பொழுது அமைச்சர்களாக இருப்பவர்கள்; இனி வரலாம் என்று ஆசைப்படுகின்றவர்கள் – இந்த இரண்டு சாரார் தவிர அரசியலுக்கு வேறு ஆள் கிடைக்காது.

ஆகையினாலே மக்களாட்சியினுடைய மாண்பு கிடைக்க வேண்டுமானால் மாணவர்கள் அரசியல் பிரச்சினைகளை உயிரூட்டத்துடன் கவனிக்க வேண்டும். ஆனால் அரசியல் முறைகளிலும், அரசியல் அமளிகளிலும் அவர்கள் நுழையத் தேவை இல்லை. அதை நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றேன். இப்பொழுது அரசியலைப் பற்றியே கவலைப்படாமல் பி. ஏ. வரையில் படித்துவிட்டு அல்லது புலவர் வகுப்பு முடித்துவிட்டு—நான் பெறவேண்டிய படிப்பு பெற்றாகிவிட்டது. இன்ன கல்லூரியில் வேலைக்கமர்ந்துவிட்டோம்—இனி அரசியலைப் பற்றிக் கவனிப்போம் என்று ஒரு நாளைக்கு அந்தப் புலவர் நினைத்து–தெருத் திண்ணையிலே உட்கார்ந்து எதிர்வீட்டுக்காரரைக் கூப்பிட்டு அரசியல் பேசலாம் வாருங்கள் என்று நாட்டிலே எத்தனை கட்சிகள் இருக்கின்றன? — நாட்டிலே உள்ளது இந்த இரண்டு மூன்று கட்சி—இதிலே யார் யார் இருக்கிறார்கள்–அவர்களுக்கு உள்ள கொள்கைகள் எல்லாம் என்னென்ன — இன்னின்ன கொள்கைகள் — எதிலே அவர்களுக்குச் சண்டை–இதிலே சண்டை – ஓகோ—நான் அப்படியானால் இதிலே சேருகின்றேன் என்று முடிவு எடுத்துச் செயல்பட முடியாது. ஏன் என்றால் உள்ள நெகிழ்ச்சி என்பது அவ்வப்போது ஏற்படுகின்ற எண்ணத்தை ஒட்டித்தான் வரவேண்டுமே தவிர திடீரென்று சாதாரணமாகக் காற்று ஊதினால் பெலூனாக விரிவதைப்போல் புதிய எண்ணத்தை மனத்திற்குள்ளே புகுத்தினால் மனம் ஏற்றுக் கொள்ளாது,

மனம் எப்படி வளர்ச்சிக்கு உட்பட்டதோ அதைப் போல எண்ணமும் எழுச்சியும்கூட வளர்ச்சிக்கு உட்பட்டது. அந்த வளர்ச்சி என்றையதினம் தடைப்படுகின்றதோ, அன்றைய தினம் மனிதன் மூன்று நிலைகளை

அடைகின்றான். ஒன்று அவன் சாகிறான். அல்லது அவன் காட்டுமிராண்டி ஆகின்றான் — மற்றொன்று அவன் பைத்தியக்காரனாகின்றான், இந்த மூன்று நிலைகளைத் தவிர மற்ற எந்த நேரத்திலேயும் மனிதனுடைய உள்ளத்திலே எண்ணமும் உணர்ச்சியும் எழுச்சி யடையாமல் இருக்காது. ஆகையினாலே மாணவர்கள், அரசியல் பிரச்னைகளை கவனிக்காமலேயேஇருக்கவேண்டும் என்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அந்த அச்சத்திற்குக்காரணம் என்ன? இன்றையத்தினம் தமிழ் மாணவர்களிடத்தில் தமிழ் ஆர்வம் காணப்படுகின்றது. அவர்கள் தங்களுடைய இனம் எது என்று கேட்கின்றார்கள். தங்களுடைய இனம் ஏன் இழிநிலையில் இருக்கின்றது என்று கேட்கின்றார்கள். தங்கள் எல்லையைத் தொலைத்தவர்கள் யார் என்று கேட்கின்றார்கள். பூமி மடியிலே இருக்கின்ற தங்கத்தை ஏன் கல்வி எடுக்கவில்லை என்று கேட்கின்றார்கள். மலைச் சரிவுகளிலே இருக்கின்ற இரும்பு எங்களுக்கு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்கின்றார்கள். எங்களுடைய நாட்டுத் தமிழ் மகன் ஏன் வெளிநாடுகளில் கூலியாக இருக்கின்றான்? வெளிநாடுகளில் கூலி வேலைசெய்து கொண்டிருந்தவன் இங்கே எப்படிக் கொடிகட்டி ஆளுகின்றான்? என்று மாணவர்கள் இன்றையதினம் கேட்கின்றார்கள். ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் அந்த நேரத்திலே தான் சொல்லுகின்றார்கள் — மாணவர்களே நீங்கள் படியுங்கள்—படியுங்கள் — நித்த நித்தம் படியுங்கள் மென்மேலும் படியுங்கள்—புத்தம் புதிய புத்தகத்தைப் படியுங்கள் — அரசியலைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் இந்த புத்திமதி அல்லது அறிவுரை தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தரப்படுகின்ற அறிவுரையே தவிர, உண்மையானதல்ல.

ஆனால் அதை விளக்குகின்ற அதே நேரத்தில் நான் நம்முடைய மாணவத் தோழர்களை, நீங்கள் கட்சி அரசியலுக்கு வந்துவிடுங்கள் என்று அழைக்கவில்லை; நான் அழைத்ததுமில்லை; அழைக்கவுமில்லை. நான் அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லியிருக்கின்றேன். நான் சார்ந்திருக்கின்ற அரசியல், பிரச்னைகளை அலசிக் கொண்டே என்றென்றும் இருக்கும் அரசியலென்று நாங்கள் கருதவில்லை; என்றைக்காவது ஒரு நாளைக்குப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பு நம்முடைய கரத்திலே தரப்படும் என்று நம்பிக்கையோடு பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியலாகும். ஆகையினால் ஆட்சிப் பொறுப்பு நம்மிடத்தில் தரப்படுகிற நேரத்தில் ஆட்சி அலுவலைக் கவனிக்கத்தக்க அறிவாற்றல் படைத்தவர்கள் இன்றையதினம் மாணவர் மன்றங்களிலேயிருந்து கிடைக்க வேண்டும்.

சர்தார் படேல் அவர்கள் சுயராஜ்யம் கிடைத்தவுடன், இங்கிலாந்து நாட்டிலேயிருந்து இந்த நாட்டிலே பணியாற்றிக்கொண்டு வந்த, பெரிய வெள்ளைக்கார அதிகாரிகளை ஊருக்கு அனுப்பிவிட வேண்டுமென்று மற்ற காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்திய நேரத்திலே சொன்னதை பத்திரிகையிலே படித்த

நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்றா இரண்டா உரைத்திடவே முடியாது
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை — ஆரம்ப சுகாதார நிலையம் — குடும்பநலத் திட்ட நிலையம் ஒன்றை அணுகி தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு:
சுகாதாரம்-குடும்பநலத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6.

நினைவு இருக்கின்றது. அவர் சொன்னார். வெள்ளைக்கார நாட்டு பெரிய அதிகாரிகளை வெள்ளைக்கார நாட்டுக்கு அனுப்பிவைத்தால், அவர்கள் பார்த்த அலுவலைப் பார்ப்பதற்குப் போதுமான அளவுக்கு இன்றையதினம் நம்மிடத்தில் திறமை படைத்தவர்கள் இல்லை—வெள்ளையர் இருக்கத்தான் வேண்டும்—என்று படேல் சொன்னார்.

எதிர்காலத்திலே தமிழகம், தனித் தமிழரசு, உருப்பெறும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற வரையில் அது ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொண்டு நடத்துகின்ற திண்தோளும், நெஞ்சுரமும், நேர்மைத் திறனும், படைத்தவர்கள் இன்றையதினம் மாணவர் உலகத்திலேயிருந்து கிளம்ப வேண்டும்—என்று நாங்களெல்லாம் விரும்பிக் கொண்டிருக்கின்றோம்,

ஆகையினால் நீங்கள் அரசியலிலே கலக்காதீர்கள்! ஆனால் அரசியலை மறவாதீர்கள், உங்களினம் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறது என்பதை ஒரு பொழுதும் மறவாதீர்கள். உங்களுடைய நாடு அடிமைப்பட்டு இருக்கிறது—அதை நீங்கள் கனவிலும் மறவாதீர்கள். உங்கள் எல்லை களவாடப்படுகிறது. அதை நீங்கள் எந்த நேரத்திலும் மறந்து விடாதீர்கள். நீங்கள் செல்வ நாட்டில் பிறந்தவர்கள் — தரித்திரத்திலே தவித்துக் கொண்டிருப்பவர்கள் — அதற்குக் காரணம் யாரென்பதை, நீங்கள் பக்கம் பக்கமாக வரலாற்றைப் புரட்டுகின்ற நேரத்திலே, மனக்கண்ணாலே கண்டுபிடிக்க வேண்டும். நீங்கள் களம் புகுந்து குற்றவாளிகளை வழக்கு மன்றத்திலே நிறுத்துகின்ற நேரம் வருகின்றபோது நீங்கள் சுட்டு விரலாலே சுட்டிக் காட்டுகின்ற பொழுது, நீங்கள் வீசும் வாதம், இன்றையதினம் நீங்கள் பெறுகின்ற படிப்பிலேயிருந்து கிளம்புவதாக இருக்கவேண்டும்.

அதற்கேற்ற வகையிலே நீங்கள். மாணவப் பருவத்திலே நல்ல நிலைமைகளைப் பெறவேண்டும் என்று உண்மையிலேயே நான் விரும்புகின்றேன். அதற்கு ஏற்ற நல்ல கருத்துக்களை மாணவர் மன்றம் அளித்து வருகின்றது. நான் இந்த அவைக்கு வருவதற்கு முன்னால் மாணவத் தோழர்கள் தீட்டிய ஓவியங்களைப் போய்ப் பார்த்தேன். ஓவியங்களைப் பார்த்தால், ஓவியத்திலே அரசியல் இல்லையென்று கருதுகிறீர்கள்? 15-ஆண்டுகளுக்கு முன்னாலே இத்தகைய ஓவியங்களைத் தீட்டமாட்டார்கள். 100 ஓவியங்களில் 90 ஓவியம் கடவுளைப் பற்றிய ஓவியங்களாக இருக்கும். வேண்டுமா வேண்டாமா அந்தப் பிரச்சினையல்ல—அது நாமெல்லாம் ஒருபொழுது கூடித் தீர்மானித்து விடுகின்ற பிரச்சினையல்ல! நான் எடுத்துக்காட்டுக்குச் சொல்லுகின்றேன். பத்தாண்டுக்கு முன்னாலே ஓவியமென்றால் என்ன ஓவியம் இருக்குமோ, அதுவா இன்றையதினம் இருக்கின்றது?

மிக்க திறமையோடு ஓவியத்தைத் தீட்டியிருக்கின்றார்கள் மாணவத் தோழர்கள்! அவர்கள் அந்தி வானத்தைக் காட்டியிருக்கின்றார்கள் — அரும்பைக் காட்டியிருக்கின்றார்கள், மலரைக் காட்டியிருக்கினறார்கள்—அரும் பெரும் வீரப் பெருமக்களைக் காட்டியிருக்கின்றார்கள் – அழகுகளைக் காட்டியிருக்கிறார்கள்—இவைகளை யெல்லாம் காட்டியிருக்கின்ற அருந்திறமை மாணவப் பருவத்திலேயே கிடைத்திருக்கிறது. இவ்வளவு ஓவியத் திறம் படைத்த மாணவன், எதிர்காலத்தில் ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்திலேபோய் ஓவிய ஆசிரியராவதற்காக மனுக் கொடுத்து அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் இன்ன இனத்தானுக்குத்தான் எங்கள் கல்லூரியில் இடம் உண்டு என்று சொன்னால் உடனே, ஓவியக்கலை படித்தானே, இந்த மாணவன், அரசியலை வாசற்படியிலே அன்றையதினம் பார்க்கிறான்.

ஆக எதிலே பார்த்தாலும் — நான் தெளிவாகச் சொல்லுகின்றேன் — அரசியலிலே இருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது.

சிலப்பதிகாரம்கூட என்ன என்று கருதுகின்றீர்கள்? 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்' —எங்கே அரசியல் போய்விட்டது? இராமாயணத்தைப் படிக்கின்ற பாகவதர்கள் அரசியல் காட்டாமலா இருக்கிறார்கள்? அரசியல் என்பது ஏதோ பாதகத்திலே ஒன்று என்று கருதவேண்டாம். மாணவப் பருவத்திலே கல்வியைக் கெடுத்துக்கொண்டு அரசியலிலே நுழையாதீர்கள். அதைத்தான் தமிழனிடத்திலே பற்றுக்கொண்டவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் சொல்லுகின்றவர்கள் எந்தமனப்பான்மையோடு சொல்லுகின்றார்கள் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான் நான் அதனைச் சொன்னேன். ஆகையினாலே வளர்ந்திருக்கின்ற இந்தத் தமிழார்வம் நன்றாகக் கனிந்து தமிழ் நாட்டுக்கு நல்ல சுவையும் பயனும் கிடைக்கத்தக்க விதத்திலே, நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டும்.

இப்பொழுது நாம் இருக்கிற நிலை எப்படியிருக்கிற தென்றால் தெனாலிராமன் சித்திரத்தைப்போல் இருக்கிறது. தெனாலிராமன் சித்திரம் என்றால் உங்களுக்குத் தெரியும். மன்னன் கூப்பிட்டு உனக்குச் சித்திரம் எழுதத் தெரியுமா என்றான் — தெரியும் என்றான் — அப்படியானால் எழுது என்றான்—அதற்கு ஒரு மாளிகை தரச் சொன்னான்—சித்திர வேலைப்பாடு முடிந்ததும் மன்னன் தெனாலிராமனை அழைத்துக்கொண்டு போனான்—சுவரைப் பார்த்தான். அழகான கண் மட்டும் இருந்தது. இதென்ன கண் இருக்கிறதே மூக்கு எங்கே என்று கேட்டான். இதோ பாருங்கள் என்று அழைத்துக்கொண்டு போய் இன்னொரு பக்கத்திலே காட்டினான்—மூக்கு மட்டும் இருந்தது. கண் வரையிலே அழகாகத்தான் இருந்தது. மூக்கு வரையிலே அதுவும் அழகாக இருந்தது. இன்னொரு பக்கத்திலே தோள் இருந்தது—இன்னொரு பக்கத்திலே தாள் இருந்தது. இன்னொரு பக்கத்திலே உடல் இருந்தது. வேறொரு பக்கத்திலே சில உறுப்புக்கள் அழகழகாக எழுதப்பட்டிருந்தன—அவை ஒன்று சேர்க்கப்படவில்லை—ஏன் என்று கேட்டதற்குத் தெனாலிராமன் சொன்னான்! நான் அந்தந்த உறுப்புக்களை எவ்வளவு அழகாக எழுதுகின்றேன் என்பது மொத்தமாக எழுதினால் கண்டுபிடிக்க முடியாதல்லவா? இதோ கண்ணைப் பாருங்கள் அழகாக இருக்கிறதல்லவா எனக்குக் கண் நன்றாக எழுதத் தெரியும்—இதோ மூக்கு நன்றாக எழுதத் தெரியும் அல்லவா—என்று எடுத்துச் சொன்னான் என்று ஒரு பட்டிக்காட்டுக் கதை சொல்வார்கள்.

தமிழனுடைய அறிவு இன்றையதினம் தெனாலிராமன் சித்திரத்தைப் போல சிதைந்து சிதைந்து இருக்கிறது. இதெல்லாம் ஒரே கோட்டுக்குள்ளே கொண்டு வரப்படவேண்டும்.

அப்படிக் கொண்டுவரப்படுகின்ற நாளிலேதான் தமிழனுடைய விடுதலை உருவாக்கப்படும். அப்பொழுதுதான் தமிழன் நல்வாழ்வு பெறுவான் என்ற நல்லநம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

(அமரர் அண்ணா அவர்கள், 21-7-57ம் நாளன்று, சென்னை தியாகராயர் கல்லூரி அரங்கில் நடைபெற்ற மாணவர் மன்ற வெள்ளி விழாவில் பேசியவை.)

# பௌர்ணமி நிலவு!

—பேராசிரியர் மு. உலகநாதன்—

அறுத்துவைத்த உருளைக்கிழங்கின் வட்ட வடிவம்போல் வானத்தில் நிலா ஒட்டிக்கொண்டிருந்தது. மஞ்சளும் வெண்மையும் கலந்த அதன் ஒளி பூமியை பொன்னிறமாக்கி வேடிக்கைப்பார்த்தது. அந்த வட்ட நிலாவின் ஒளியை அனுபவித்துக் கொண்டிருந்த கோடானு கோடிப் பெண்களில் "கருப்பியும்" ஒருத்திதான்.

கருப்பி என்ற பெயரினாலோ குடிசையில் வாழும் தகுதியினாலோ பூரணநிலவு அவளைப்பார்த்து 'வக்கணை' காட்டாமல் இல்லை. அவளும் அதன் பொலிவைக்கண்டு பூரிக்காமல் இல்லை.

எங்கே பிறந்தால் என்ன? என்ன தொழில் செய்தால் என்ன? இளமையின் குறும்புக்கும் துருதுருப்புக்கும் விதிவிலக்காய் விலகி நிற்கும் மனிதப்பூச்சிகளின் எண்ணிக்கையை உலகத்தில் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

வானத்தில் வட்ட நிலாவையே பார்த்து மல்லாந்து கிடக்கும் "கருப்பி" அந்த வரிசையில் தன்னையும் ஒருத்தியாக்கிக்கொள்ளும் பைத்தியகாரியாக இருக்கவில்லை.

சாணத்தைத் தெளித்துக் கூட்டி பெருக்கிய வாசலில் கருப்பி அந்தக் கந்தல் பாயை எடுத்துக்கொண்டு வந்து விரித்தாள்.

பகல் பூராவும் உழைத்த உழைப்பில் பாரம், இப்போது அவள் இடுப்பின் வந்து ஏறிக்கொண்டது. பாயில் அமர்ந்தவள் அப்படியே தன் முகத்தை நிலவுக்கு நேராக நிமிர்த்திப்படுத்துக் கொண்டாள்.

நிலவுக்கு வெட்கமோ என்னவோ இப்போது அது ஒரு மேகக் கூட்டத்தின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தது.

கருப்பியின் முகத்தைத்தான் நிலவு பார்க்க முடிந்ததே தவிர அவளின் பெயரை அது தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

போட்டி. முகத்திற்கும் முகத்திற்கும் தானேயன்றிப் பெயருக்கும் பெயருக்கும் இல்லையென்பதை நிலவின் விரைந்த ஓட்டம் காட்டிக் கொண்டிருந்தது.

தோற்றவர்கள் ஓடாமல் வேறு என்ன செய்ய முடியும்? நிலவும் அதைத்தான் உலகத்திற்கு அறிவித்து நின்றன!

பாயில் படுத்துக்கிடந்த கருப்பியின் நெஞ்சக் குழியில் இருந்து இப்போது ஒரு பெருமூச்சு வெளிப்படுகிறது.

வெற்றியின் களிப்பிற்குப் பதிலாக அப்பெருமூச்சு தன் பின்னாலே ஒரு நீண்ட வரலாற்றைக் காட்டிக் கொண்டு வெளிப்பட்டது. அந்தப் பெருமூச்சின் சோக நிகழ்ச்சியில் உடல் வியர்த்துப் போவதையும் எங்கிருந்தோ வந்த குளிர்காற்று அவள் மேனியில் பட்டுச் சில்லிடச் செய்ததையும் அவள் அறிந்திருக்க நியாயமில்லைதான்.

வெயிலும் பனியும் குளிரும் மழையும் எல்லாம் ஒன்றுதான் அவளைப் பொறுத்தமட்டில். தன் உடலை மெல்ல அவள் ஒருக்கழித்துத் திருப்பினாள், குடிசைக்குள்ளே படுக்க வைத்திருந்த அவளது பன்னிரண்டு வயதுப்பையன் முத்து அருகில் எப்போது வந்து படுத்தானோ அது அவளுக்கே தெரியாது.

வந்துபடுத்தஅவனைஅவளின்தாய்மைக்கே உரிய முறையில் மெல்ல வருடுவாள். அப்போது அளவில் உதடுகள் ஏதோ முணுமுணுக்கும். கண்கள் தூக்கத்தின் சுழற்சியில் சிக்கித் தவிக்கும். அவள் கண்ணை மூடி உறங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் கோழியும் விடிந்துவிட்டது என்பதைக் காட்டிக் கூரை மீது ஏறிக் கூவித் தொலைக்கும். அவ்வளவுதான் அவள் தூக்கம். அன்றாடம் நடக்கும் வாடிக்கை நிகழ்ச்சி யாகையால் கருப்பி, கோழி கூவிய உடனேயே விழித்துக் கொள்வாள்.

அவள் சாணத்தைக் கரைத்து வாசலில் தெளித்துக் கூட்டும் மறுநாள் நிகழ்ச்சிக்குத் தன்னைத் தயார் படுத்திக்கொண்ட சிறிது நேரத்திலேயே காலை வேலைகள் மடமடவென்று முடிந்துவிடும்.

கோழி கூவியது. அந்தக் கூக்குரலும் கருப்பியின் காதில் விழுந்தது. அவள் கண்களும் இதுவரை இமைக்காமல் வானத்தைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தன. சந்திரன் இப்போது மேலைத் திசையில் அடிவான முகட்டில் மலையை முத்தமுட்டுக் கொண்டிருந்தான்.

வளர்பிறை—வளர்ந்த பிறையாகி நாளைக்குத்தான் பௌர்ணமி நிலவாகக் காட்சியளிக்கப் போகிறான். அதை நினைத்ததுமே அவளது வயிறு பகீரென்றது.

• • •

புல்லறுத்துக் கட்டுக்கட்டாகக் கட்டிக் குதிரைவண்டி ஓட்டும் 'காதருக்கு' விற்கும் வாடிக்கைக் காரன்தான் இராமன்.

'காதருக்குப்' புல்லை விற்றால்தான் இராமனுக்கும் விற்றாற்போல் இருக்கும். ராமன் அறுத்துப்போட்ட புல்லைத் தின்றால்தான் காதரின் குதிரைக்கும் தின்றாற்போல் இருக்கும். அவ்வளவு அன்னியோன்னியம் பரஸ்பரம்.

எப்படியோ மாலை ஆறுமணிக்கு இராமனின் கையில் குறைந்தது ஒன்னரை ரூபாய்க்குக் குறையாமல் வரும். நேராக வீட்டிற்கு வருவான். சிறிது நேரத்திற்கெல்லாம் அப்பணம் கருப்பியின் கைக்குத் தடம் புரளும்.

அந்த மட்டில் இராமன் ஒரு வம்பு தும்பிற்குப் போகாதவன் என்பதும் பணத்தைத் தண்ணீராய் இறைக்காதவன் என்பதும் உண்மை.

அதனால்தான் அந்த மூன்று உயிர்க்கும் அரைவயிற்றுக் கஞ்சியையாவது வைத்துக் குடிக்க முடிந்தது.

போன வருடம் இதே பௌர்ணமிக்கு முந்திய நாள் கருப்பி அப்படி ஒன்றும் இராமனிடம் கேட்கக் கூடாததைக் கேட்டுவிடவில்லை.

விடிந்தால் ஏதோ கிராமத் திருவிழா, அதற்குத் தனக்கும் ஒரு புடவை வேண்டும் என்றுதான் கேட்டிருந்தாள்.

புதுப்புடவை உடுத்திக்கொண்டு தன் கணவன் இராமனோடு விடிய விடிய பௌணர்மி இன்பத்தை அனுபவிக்க அவளுக்கு மட்டும் விருப்பம் இருக்காதா என்ன?

பௌர்ணமி நிலவு அவளுக்கென்று தனியாக ஒருமுறை வரவா போகின்றான்? இல்லையே! அதனால் தான் தன் மனத்துள் அடக்கிவைத்திருந்த ஆசையையெல்லாம் வெளிப்படுத்தி அவனிடம் தன் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தாள்.

வழக்கத்திற்கு மாறாக இராமன் குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டும் தொட்டிக்கு எதிர்த்த வரிசையில் ஏழெட்டுப்புல் கட்டுகளோடு காட்சியளித்தாள்.

மாலை மணி ஆறு! காதர்பாய் என்னப்பா இராமா! என்று குரல் கொடுத்துக்கொண்டே தன் வண்டியை அவனருகில் கொண்டுபோய் நிறுத்தினான்.

பெரியகட்டாகப் பார்த்துப் பிரித்து அதனை இராமன் வண்டியின் அடியில் இருக்கும் கயிற்று வலையில் திணித்து விட்டு நிமிர்ந்தான். குதிரையும் அவனைப் பார்த்து ஒரு கனை கனைத்துக்கொண்டது.

காதர்பாய் ஒரு பெரிய கருணை வள்ளல் இல்லைதான். இருந்தாலும் இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டி இராமா வைச்சுக்கோ என்று அவன் கையில் திணித்துவிட்டுக் குதிரையின் லகானைப் பிடித்திழுத்தான். வண்டியும் மிகவேகமாக நகர்ந்தது.

ஓடும் வண்டியை நிறுத்த யாரால் முடியும்? இராமனின் திகைப்பு அடங்குவதற்கு முன்னமேயே அவன் கையில் எட்டு ரூபாய் சேர்ந்துவிட்டது. அவன் கொண்டு வந்த புல்லுகட்டுகள் இருந்த இடம் தெரியவில்லை.

இராமனுக்கு தலை லேசாகச் சுற்றியது. கருப்பியின் நினைவு. கையில் ஒரு சுங்கடிச்சேலை.

சேலையை உடுத்திக்கொண்டு கருப்பி குடிசையைவிட்டு வெளியே வந்தாள். பௌர்ணமிச் சந்திரன் அதற்கு முன்னமேயே அங்குவந்து மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாயிலே வந்தமர்ந்த அவளின் மடியிலே இராமன் மல்லாந்து படுத்தவாறு தானும் அந்தச் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தான். கருப்பி ஏதேதோ சொன்னாள். இராமன் உம் உம்! என்று கேட்டுக் கொண்டிருந்தான். சந்திரனுக்கு அதனைப் பார்ப்பதில்தான் என்ன இரசனையோ, தெரியவில்லை.

அவனும் விடாமல் பார்த்துக் கொண்டிருந்தான். இராமனின்'உம்' சத்தம் கேட்கவில்லை.

கருப்பி அவனை மெல்ல அசைத்து எழுப்ப முயன்றாள். அவன் நெற்றி சில்லிட்டு நிலவின் தண்மையை வாங்கிக்கொண்டிருந்தது.

மச்சான்! மச்சான்! என்றகுரலுக்கு பேச்சில்லை. அவள் கை அவன் மூக்கின்மேல் வைக்கப்பட்டது. அங்கே மூச்சில்லை.

நிலவு ஒரு கருத்த மேகத்தினுள் மறைந்துகொண்டது. இராமனின் உடம்பும் நீலம் பூத்திருந்தது.

கருப்பியின் பேச்சும், சிரிப்பும், குதூகலமும் போனவருடத்துப் பௌர்ணமி நிலவில் ஊரே அதிரும் படிப்போட்ட 'மச்சான்......!' என்ற கூக்குரலோடு அடங்கிவிட்டது.

• • •

முத்து பக்கத்தில் படுத்திருந்தான் நாளை பௌர்ணமி. அவன் வாய் 'அம்மா! புதுச்சட்டை! அம்மா! புதுச்சட்டை!' என்று முணுமுணுத்தது.

அதைக்கேட்டவுடனேயேகருப்பி மு...த்...து! என்று அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். தூக்கத்திலும் அந்தப் பிஞ்சு முகம் சிரித்துக் கொண்டிருந்தது.

புதுப் புடவை—இராமன்–கோடிப் புடவை—கடைசிப் புடவை—பௌர்ணமி நிலவு—புதுச் சட்டை என்று அவள் வாய் ஏதேதோ அரற்றியது.

தாய்மை விழித்துக்கொண்டது. தூங்கிக்கொண்டிருந்த தன் மகனை கருப்பி தன்மடியில் கிடத்திக் கொண்டு, கன்னம், உச்சி ஆகிய இடங்களில் முத்தமிட்டாள். மார்போடு அணைத்துக்கொண்டாள்.

வேண்டாமடா! வேண்டாம்! உனக்குப் புதுச்சட்டை வேண்டாம் என்று புலம்பினாள்.

தாயின் சொல்லைக் கேட்காமல் விளையாடச் செல்கிறேன் என்று வீட்டைவிட்டு முத்து அதிகாலையிலேயே வெளியே சென்றுவிட்டான்.

மாலை ஆறு மணி!

கருப்பி 'காதர்பாயின்' குதிரைக்குத் தன்புல்லுக்கட்டை தந்துவிட்டு அவசர அவசரமாக வீடு வந்து சேர்ந்தாள். அவள் கையில் அப்போது ஒன்ணரை ரூபாய்களே இருந்தன.

கண்கள் முத்துவைத் துழாவின. முத்து தன் தலையில் ஒரு புல்லுக் கட்டோடு குடிசைக்கு வந்தான்.

தாயின் கண்கள் கோபத்தால் சிவந்தன. 'டே! மு...த்...து' என்று கத்தினால் கருப்பி.

அவன் தலையில் இருந்த புல்லுக் கட்டு பக்கத்தில் கட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டியின் பக்கத்தில் போய்விழுந்தது.

ஆட்டுக்குட்டி அதைக்கண்டு விரண்டு நின்றது.

'அம்மா' வென்று அலறிக் கொண்டு தாயின் மடியில் வந்து விழுந்தான் முத்து.

இரவு எட்டு மணி

பௌர்ணமி நிலவு இப்போதும் மௌனம் சாதித்தது.

கருப்பி வானத்தைப் பார்த்தாள். கருமேகங்கள் சூழ்ந்து கொண்டு நின்றன.

முத்து தன் விரலைத் தாயிடம் காட்டிப் புல்லறுக்கும்போது பன்னரிவாள் அறுத்துவிட்டது, என்று கூறினான்.

அதைச்சுற்றி நீலம் பூத்திருந்தது. வானத்து நிலவும் மேகத்தினுள் மறைந்தது.

முத்துவின் கைகள் அவள் மடியில் இருந்து நழுவி 'சொடக்' கென கீழே விழுந்தது.

'ஐயோ' என்ற பேரிரைச்சல் கருப்பி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். அழுதாள். புலம்பினாள். அரற்றினாள்.

பக்கத்தில் கட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டி ஓரிடத்தில் நிற்காமல் இங்கும் அங்கும் தாவியது. விரண்டது, 'மே மே' என்று கத்தியது.

கருப்பி அதன் பக்கம் வேண்டா வெறுப்பாகப் பார்வையைச் செலுத்தினாள்.

பௌர்ணமி நிலவு இப்போது பளிச்சென வெளியே தலையை நீட்டினான்.

அந்த பச்சைப் புல்லுக்கட்டு சிதறிக் கிடந்தது.

ஆட்டுக்குட்டி வெறித்து வெறித்து துள்ளித் துள்ளிக் கத்தியது.

கருப்பி எழுந்து சென்று பார்த்தாள். அந்தப் புல்லின் இடையே தலையறுப்பட்ட ஒரு பாம்பு நெளிந்து கொண்டிருந்தது.

தலை தனியாகவும் உடல் தனியாகவும் கிடந்தது. உடல் மட்டும் நெளிந்து கொண்டிருந்தது.

ஓடி வந்து தன் பிள்ளையின் கையைப் பார்த்தாள். அது நீலம் பூத்திருந்தது.

முகத்தைப் பார்த்தாள்.

சென்ற ஆண்டுப் பௌர்ணமியில் தந்தையின் உயிரைத் திருடிச்சென்ற பாம்பினை இராகு கேதுவாக்கிவிட்டேன் என்று அந்த முகம் வெற்றிக் களிப்பில் உறங்கிக்கொண்டிருந்தது.

சென்ற பௌர்ணமியில் தன் கணவன் இறந்ததற்குரிய காரணம் கருப்பிக்குஇப்போதாவதுபுரிந்ததோ என்னவோ?

இராகு கேதுவின் கதையையும் சந்திரன்தான் அறிவானே ஒழிய கருப்பி அறிந்திருக்க நியாயமில்லை தான்.

ஆனால் அந்தப் பௌர்ணமி நிலவுக்கு எல்லாமே புரிந்துதான் இருந்தது!

# எங்கே நடந்துள்ளது இந்த அளவு சாதனை!

## கண் திறந்து பார்க்கட்டும் கம்யூனிஸ்டுகள்!

### சென்னை கலெக்டர்கள் மாநாட்டில்

முதலமைச்சர் விளக்கம்!

துனியாருக்குச் சொந்தமான நிலங்களையும், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களையும், தரிசு நிலங்களையும் வன்முறையில் பறித்து நிலம் இல்லாத ஏழை மக்களுக்குப் பங்கு போட்டுக் கொடுக்கப்போவதாக ஓரிரு அரசியல் கட்சிகள் அறிவித்து இருப்பது உங்களுக்கு நன்கு தெரியும். வன்முறையில் இக்கொள்கையை நிறைவேற்ற முயல்வது சட்ட விரோதமானது மட்டுமல்ல; ஜனநாயக விரோதமான செயலும்கூட.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிலமில்லாத ஏழைகட்கு நிலம் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் உச்சவரம்புச் சட்டத்தை மாற்றி, 15 ஏக்கரா உச்சவரம்பாக நிர்ணயித்தது மட்டுமின்றி அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களையும் மாநிலம் முழுவதிலுமாக மக்களுக்கு வழங்குவதில் இந்த அரசு பெரும முயற்சிமேற் கொண்டு, வெற்றியும் அடைந்து இருக்கின்றது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள், 1967-68 முதல் 1969-70 வரை, நிலம் இல்லாத ஏழை விசாய மக்களுக்கு அரசு தரிசு நிலங்களுல் அளிக்கப்பட்ட பரப்பு 2 50 208 ஏக்கர்.

அதேபோல் தகுதியுள்ள ஏழை மக்களுக்கு வீட்டு மனைக்கு நிலம் பட்டா செய்வதிலும் இந்த அரசு ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளது. 1970-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் முடிய 2,07.864 நில ஆகிரமிப்புக்களில் 93 472 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது, உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உச்சவரம்புக்கு மேலாக உள்ள நிலங்களில், இந்த அரசு இதுவரை 16,000 ஏக்கர் நிலத்தை ஒப்படைத்திருக்கிறது, மனுநீதித் திட்டத்தின் மூலமும், தீவிர பட்டா அளிப்புத் திட்டத்தின் கீழும் இம் மாநிலத்தில் உள்ள மீதியுள்ள 1·94 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் முழுவதையும் ஏழை உழவர்களுக்கு 1972-க்குள் பட்டா அளிப்பது என்று இவ்வரசு முடிவு செய்துள்ளது.

இதுபோன்று ஏழை விவசாய மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் அரசு பல்வேறு வழிகளைக் கையாண்டு வரும்போது வன்முறையால் அரசு நிலங்களைப் பறிக்க வேண்டுமென்ற ஒரு கிளர்ச்சி அரசியல் லாபம் கருதியதே தவிர வேறொன்றுமில்லை.



தனிப்பட்டவர்கள் நிலம் ஆக்கிரமிப்புச் செய்தால், நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் அவர்களை நீக்கலாம். ஆனால் அரசியல் கட்சிகள் மக்களைத் திரட்டி ஒரு இயக்கமாக்கி, அரசு நிலங்களை ஆக்கிர முயலும்போது இது ஒரு சட்டம்— ஒழுங்கு (Law and order) பிரச்னையாகிறது. ஆகவே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத்தக்க நடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பாகிறது.

நிலம் இல்லாத ஏழை அரிசன மக்களுக்கு சாகுபடி செய்வதற்காக அரசு தரிசு நிலங்களை வழங்க வேண்டுமென்ற கொள்கையை இவ்வரசு தீவிரமாகப் பின்பற்றி வருகிறது. ஏராளமான நிலங்கள் இதுவரை ஏழை அரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பின்பற்ற வேண்டும். சாகுபடிக்காகத் தற்போதுள்ள விதிகளின்படி நில ஒப்படை செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய வரிசை முறை பின்வருமாறு:—

(1) போரில் கொல்லப்பட்ட அல்லது ஊனமுற்ற ராணுவ வீரர்களின் குடும்பம்.

(2) ராணுவப் பணியில் உள்ள வீரர்கள்.

(3) முன்னாள் ராணுவ வீரர்கள்.

(4) பர்மா—இலங்கை அகதிகள்

(5) தங்கக் கட்டுப்பாடு காரணமாக வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(6) நிலமற்ற ஏழை அரிசனங்கள்.

(7) நிலமற்ற பிற ஏழைகள்.

இந்த வரிசையில் நிலமற்ற ஏழை அரிசன மக்கள் ஆறுவது இடம் தான் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் ஒப்படைக்கும் வரிசையில் உயர்ந்த இடம் கொடுத்து அவர்களுடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யும் வகையில் நிலமற்ற ஏழை அரிசனங்களுக்கு இந்த வரிசையில் இரண்டாவது இடம் அளிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது இந்த முடிவின்படி மாற்றி அமைக்கும் வரிசையை தீவிரமாக பின்பற்ற மாவட்ட ஆட்சியாளர்கள் நிலமற்ற ஏழை அரிசனங்களுக்கு மாவட்டம் தோறும் நிலம் வழங்குவதில் சற்றும்

பின் தங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு சில இடங்களில் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் இன்றி, நிலம் வழங்குவதற்குத் தகுதியற்ற சிலருக்கும் நிலம் வழங்கப்பட்டுள்ளதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. இத் திட்டத்தின் அடிப்படையே நிலமில்லா ஏழை மக்கள் எல்லா மாவட்டங்களிலும் அரசு தரிசு நிலங்களை முழுமையும் பெற்று நல்வாழ்வு பெறவேண்டுமென்பது உங்களுக்கு நன்கு தெரியும். இந்த நிலையில் தகுதியற்றவர்களுக்கு அரசு தரிசு நிலங்கள் ஒரு சில இடங்களில் வழங்கப்பட்டிருக்குமானால் அது அரசின் கொள்கைக்குப் புறம்பானது என்பதை உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன், ஆகவே நிலம் பெறும் தகுதி அற்றவர்களுக்கு எங்கெல்லாம் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ, அவற்றையெல்லாம் தீவிரமாக மறு பரிசீலனை செய்து, அந்தந்த நிலையில் அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் ஏற்கனவே இலாகாவுக்கு குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளேன். அந்தக் குறிப்பின்படி அதிகாரிகள், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

வருவாய்த் துறைக் கணக்கில், ஒதுக்கப்பட்டுள்ள காடுகள் என்று பதிவு செய்யப்பட்ட சில இடங்கள், உண்மையில் காடுகளாக இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். பல இடங்களில் இதுபோன்ற நிலங்களை அரசுதரிசு நிலங்களாகப் பதிவு மாற்றம் செய்து ஏழை மக்களுக்கு ஒப்படைக்கலாம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற இடங்கள் எங்கெல்லாம் உண்டோ அந்த இடங்களினுடைய தன்மையைப் பரிசீலனை செய்து அவற்றை அரசு தரிசு நிலங்களாக மாற்றலாமா என்ற முடிவு செய்து, மாற்றுவதற்கான தகுதியான இடங்களை ஏழை மக்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. இதை நடைமுறையில் எவ்வாறு பின்பற்றலாம் என்பதைப் பரிசீலனை செய்து அரசுக்கு ஆலோசனை கூறும் வகையில் நிதி அமைச்சர், விவசாயத் துறை அமைச்சர், சட்ட அமைச்சர், வனத் துறை அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது: அக்குழு கூறும் ஆலோசனையை ஏற்று இவ்விஷயத்தில் அரசு விதிக்கும் ஆணைகளை நீங்கள் நிறைவேற்ற முற்பட்டு நிலங்களைத் தீவிரமாக ஏழை மக்களுக்குப் பட்டா செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

★

# அண்ணா  வழியில்.....

—ஆ. சோசப்

தமிழகத்தை நல்வழியில் ஆக்க – நல்ல
தன்மைகளை வாழ்வினிலே சேர்க்க — அண்ணா
அமிழ்தான கொள்கைகளை
அருந்தமிழர்க் குணர்த்திடவே வந்தார்—நலம் தந்தார்.

"பகைவரிடம் பேரன்பு காட்டும்—நல்ல
பண்புதான் புகழ்தன்னைக் கூட்டும்"—அன்பால்
வகைப்படுத்தி மாற்றாரை
வசமாக்க அவர்தந்த திட்டம்—வாழ்வுச் சட்டம்,

"மழைநீரைப் போலநீ மாறு—பரந்த
மனத்தோடு பிறரை நீ பாரு!"—என்ற
நிலைபுகழ் அண்ணாவின்
நேர்வழிப் பாதையினைத் தேடு—நடைபோடு.

அருவியைப்போல் ஓடிவரும் பேச்சு—என்றும்
அருந்தமிழே அண்ணாவின் மூச்சு—நம்மை
உருவாக்கி உயர்வாக்கி
உயர்நோக்கிச் சென்றுவிட்ட அண்ணன்–தமிழ்மன்னன்

தம்பிகளின் தவறுகண்ட காலை—என்றும்
தனிமைத்துயர் ஏற்பதவர் வேலை—அண்ணா
செம்பவள வாய்திறந்தால்
சிதறுகின்ற முத்துக்கள் அன்பு—உயர் பண்பு.

தீயோர்க்கும் நன்மைசெய்யும் உள்ளம்—தங்கத்
திருமகனும் அண்ணனுக்கோ பள்ளம்—என்றும்
வாய்மையொடு பேரன்பை
வழங்கிச்சென்ற அறிஞரவர் புத்தர்–புதுமைச் சித்தர்.

ஓயாத உழைப்பாலே மெலிந்தார்—அவர்
உண்ணாமல் உறங்காமல் நலிந்தார்—நாளும்
தாய்நாட்டின் வளர்ச்சிக்கே
தன்னுயிரை ஈந்துவிட்ட அண்ணல்—வளர் செந்நெல்.

எந்நாளும் இனிமையுடன் வாழ—என்றும்
இன்தமிழே நமையெல்லாம் ஆள—அறிஞர்
அண்ணாவின் வழியினிலே
அன்புடையீர்! அனைவருமே நடப்போம்—வாழ்வைக்
கடப்போம்!

## மிஸ்டர் அப்போலோ:

# கேலிக்கூத்துக்கு எடுத்துக்காட்டு?

—சீயேயெம்—

மிஸ்டர் அப்போலோவுக்கு, தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டு விட்டது. தொழிற் கட்சிப் பிரமுகராக இருந்த வில்சனைப் பற்றிய பெரிய நம்பிக்கையுடனிருந்த அவருக்கு, கர்சர்வேடிவ்களின் எதிர்பாராத வெற்றி, ஒரு மாபெரும் அதிர்ச்சியையே உண்டாக்கியது. ஏடுகள், இதழ்கள் யாவும், தொழிற் கட்சியின் சாதனைகளையும், பிரிட்டனின் பொது நிலைமைகளையும் அக்கு வேறு ஆணி வேருகக் கணித்து இந்தக் கட்சிக்கு இவ்வளவு மெஜாரிட்டி கிடைக்கும்; அந்தக் கட்சிக்கு அவ்வளவு மெஜாரிட்டி கிடைக்கும்; ஆகவே இன்னின்ன காரணங்களால் இவர்கள்தான் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வருவார்கள் என்றெல்லாம் புள்ளி விவர ரீதியாக வெளியிட்டு முடிவு இப்படித்தானிருக்கும் என்று முன்னதாகவே அறிவித்தும் விட்டிருந்தன.

பிரதமர் வில்சன்கூட 1964-ல், சொற்ப மெஜாரிட்டியுடன், நித்ய கண்டம் பூரண ஆயுசு என்பதற்கொப்ப 1966 வரையில் காலந் தள்ளி, இனியும் இப்படி வாழ முடியாது என்ற நிலை பிறந்து, மறு தேர்தலுக்கு உத்திரவிட்டு, மிகப் பெரிய பெரும்பான்மை பெற்று, பயம் நீங்கி, அப்பாடா என்று 1970 வரையிலே காலந் தள்ளிவிட்டார். 1966-ல் அவர் மறு தேர்தலுக்கு உத்திரவிட்ட நேரம் பயங்கரமானதாக இருந்தது. தொழிலாளர் தரப்பில் ஏற்பட்ட ஒரு சிறு வேலை நிறுத்தம், மூன்று, நான்கு நாட்கள் பிரிட்டனே ஸ்தம்பித்து நிலை குலைந்து போகுமளவுக்கு நாடு தழுவிய ஒரு போராட்டமாக, மாணவர்களும், பொதுமக்களுமே திரண்டெழுந்து நாட்டின் அமைதிக்கே உச்சத் தொல்லை இதற்கு மேலில்லை என்ற அளவுக்கு உருவாக்கிவிட்டனர். ஒவ்வொரு தரப்பினரும், ஒவ்வொரு வகையான கோரிக்கைகளை முன் வைத்ததுடன் நில்லாது, ஒரு தரப்பாரின் கோரிக்கைக்கு, மறு தரப்பாரின் ஆதரவு என்ற வகையிலும் நிலைமைகள் மாறுபட்டன. இப்படிப் பட்ட சூழ்நிலையிலேயே வில்சன் மறுதேர்தல் நடத்தி, பெரிய மெஜாரிட்டி பெற்றிருந்தார். இதற்குப் பின்பு, இந்த நான்காண்டு இடைக் காலத்தில் பிரிட்டன் சாதித்துள்ளவை பலவென்றாலும், சம்பாதித்துக் கட்டிக் கொண்டவைகளும் கூட பலவாகத்தானிருந்தது. இவைகளைப் பற்றியெல்லாம் மனத் திரையில் கொண்டு வந்து நிறுத்திய மிஸ்டர் அப்போலோவுக்கு தாம், தோல்வியுற்ற வில்சனையோ, வெற்றி பெற்ற ஹீத்தையோ பேட்டி காண்பது விரசமானதாக இருக்கக் கூடும் என்று நம்பினார். என்றாலும், பொதுநிலைமைகளை எப்படியும் இதழுக்குக் கொடுத்துவிட வேண்டுமே என்ற கவலையும் கூடவே குடையச் செய்தது.

“தேர்தல் விமர்சனம்” என்ற வகையில் தன் கருத்துக்களைக் கோர்த்துக் கொடுத்து விடலாம் என்று முடிவுக்கு வரும்போது, சில சங்கடங்களை உணர்ந்தார். என்றாலும், தான் ஒருசெய்தியாளன் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், சங்கடங்களைப் பற்றிக் கவலைப்படக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அதன் பலனாக, அவர், அவரது இதழுக்குக் கீழ்க்கண்ட விமர்சனத்தை எழுதி விட்டு, ஒருமுறைப் படித்துப் பார்த்தார்:

“பிரதமர் வில்சன் ஒருவாறு, 18ம் நாள் இரவு 11 மணிக்குத் தம் ராஜினாமாவைச் சமர்ப்பித்துவிட்டார். உடனே பிரிட்டிஷ் அரசியார் எலிசபெத், எட்வர்டு ஹீத்திடம், அன்று நள்ளிரவு 12 மணிக்கு, புதிய மந்திரி சபையைத் தாங்களே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அழைப்பை யேற்று மகிழ்ந்த புதிய பிரதமர், புன்முறுவலுடன், “நான் பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டேன்; என்னால் முடிந்தவைகளையெல்லாம் இந்த நாட்டுக்குச் செய்வேன்” என்று கூறினாராம்!

“முடிந்தவைகளையெல்லாம் நாட்டுக்குச் செய்வேன்” என்று புதிய பிரதமர் கூறியதிலிருந்து நமக்குச் சில சந்தேகங்கள் எழுகின்றன. தேர்தலுக்கு முன்பு புதிய பிரதமரின் கன்சர்வேடிவ் கட்சி தன் தேர்தல் பிரசாரத்தை ஒரு மாதிரியாக முடுக்கிவிட்டிருந்தது. இன ஒதுக்கல்பிரச்னைக்கு அது முக்கிய இடம் தந்திருந்தது. சுமார்500 லட்சம் மக்களே கொண்ட பிரிட்டனின் மக்கள் தொகையில், சுமார் 10 லட்சம் பேர்களே வெளிநாட்டுக்காரர்கள். மக்கள் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பத்து லட்சம் பேர் என்பது பெரியதொகை அல்லதான். என்றாலும் இந்தப் பிரச்னைக்கு கன்சர்வேடிவ்கள், எதனால் முக்கியத்துவமளித்தார்கள் என்பது ஆழமான சிந்தனைக்குரியதாகவே இருக்கும். முந்தைய பிரதமர் வில்சனது காலத்திலேயே இதற்கு உயிரூட்டம் கொடுக்கப் பட்டாலும், அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றப்படாமலிருந்தது. ஒருக்கால் இதன் விளைவாக, முடக்கப்பட்டிருக்கும் ரொடீஷியா கொஞ்சம் நிமிர்ந்து நிற்கலாம் என்று நினைக்க இடமுண்டு. என்றாலும் கர்சர்வேடிவ்கூட இவான் ஸ்மித்தின் நடவடிக்கைகளை இதற்கு முன் கண்டித்திருக்கிறார்கள். இந்தியாவுடன் இனி பிரிட்டனின் தொடர்புஎப்படி இருக்கும் என்பதை, இப்போது கணிக்கமுடியாது. என்றாலும், கன்சர்வேடிவ்கள் முதன் முதலாக இப்போதுதான் ஆட்சிக்கு வரவில்லையாதலால், பழைய அனுபவங்களைக் கொண்டு அவ்வளவு பெரிய மாறுதல் எதுவும் இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. காமன் மார்க்கெட் விவகாரமும் இப்படித்தானிருக்கும் என்று நம்பலாம், என்றாலும், வில்சன் காலத்தைவிட, இனி, இது ஒரு முக்கியப் பிரச்னையாக ஆக்கப்படக்கூடும் என்பதற்கான காரணங்கள் வெளிப்படையாகவே இருக்கின்றன.

ஹெரால்டு வில்சன் கட்சியினது தோல்விக்கு முக்கியத்துவம் தரக் கூடியதாக ஒரு செய்தியும் விமர்

சிக்கப்படுகிறது. தேர்தலுக்கு முதல் நாள், பிரிட்டனது வேலையில்லாத் திண்டாட்டம் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும், அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டதாகவும், இதனை கன்சர்வேடிவ்கள் சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. வில்சனுக்கு எதிரான நடவடிக்கை, அரசுத் தரப்பிலிருந்தே வந்திருக்கிறது என்றுதான் இதனைக் கருதவேண்டும்.

இந்த ஆட்சி மாற்றத்தின் மூலம், நாம் ஒன்றே ஒன்றை மட்டும் பெருமையாகவும் கருதலாம்; பின்பற்ற வேண்டிய நடைமுறை என்றும் எடுத்துக்கொள்ளலாம். அதாவது, ஒரு ஆட்சிபோய், வேறோர் ஆட்சி வரும்போது பதவி இழந்த கட்சி, அரசியல் குழப்பங்களையும், சட்டம்—ஒழுங்கு குலையத்தக்க நடைமுறைகளையும் பின்பற்றுவதில்லை. அடுத்த தேர்தல் வரையில் பொறுமையாகக் காத்திருக்கிறது. பிரசாரங்களை நடத்துகிறது! இந்த நடைமுறை நம் நாட்டுக்கும் வராதா? நாட்டுமக்களை அமைதியாக வாழவிடமாட்டார்களா?''

ஒருவாறாக படித்து முடித்துவிட்டு, அடுத்த பேட்டியையாவது நேர்முகப் பேட்டியாக்கிக் கொள்வது பற்றி யோசித்தார் மிஸ்டர் அப்போலோ. அதுவும் தமிழ் நாடு பற்றிய பேட்டியாக இருந்தால் நல்லது என்று நினைத்தார். தமிழ் நாடு பற்றிய நினைவு வந்ததுமே, அடுத்து காங்கிரஸ் பற்றித்தான் நினைக்க முடிந்தது. கம்யூனிஸ்டு பற்றியும் ஒரு பக்கம் நினைவு தலை தூக்கினாலும், மூன்று உயிர்களைப் பலி வாங்கியும், பல நூறு பேர்களைப் படுகாயப்படுத்தியும் விட்ட காங்கிரசுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

கோவைக் காங்கிரசுக்காரர்களைப் பற்றி அவர் நினைத்துக்கொண்ட போது, பரிதாபத்துக் குரியவர்கள் அவர்கள் என்று எண்ணிக்கொண்டார், கூடவே, இண்டிகேடர்களா? சிண்டிகேடர்களா? என்று மக்கள் தடுமாறுவார்களே என்ற எண்ணமும் பிறந்தது. "ஆமாம்! கூடை செங்கல்லும் பிடாரிதான்!'' என்று வாய்விட்டுச் சொன்னார் மிஸ்டர் அப்போலோ!

அவர்களைத்தான் பேட்டி காண வேண்டும் என்று அவர் நினைத்த போது அவருக்கே கொஞ்சம் சங்கடமாகத்தானிருந்தது. எனவே, அது பற்றியும் செய்தி வருணனையாகவே எழுதிவிட நினைத்தார்; செயல்பட்டார்:

"எப்படியோ கோவை மாவட்டத்து விவசாயிகள் வெற்றி பெற்றுவிட்டார்கள். அத்துடன், ஒரு காரியத்தில் வெற்றி பெறவேண்டுமானால், பலாத்காரத்தில் ஈடுபட்டுத்தான் தீரவேண்டும் என்ற நடைமுறைக்கு மற்றுமொரு உதாரணம் படைத்து விட்டிருப்பது, காலமெலாம் நிலைத்து நிற்கக் கூடியதாகும். இனி பிரச்னைகளின் அணுகுமுறைக்குக்கூட, பலாத்காரம்தான் வழி என்றும் ஆக்கிக் காட்டிவிட்டார்கள். ஒரு நயே பைசேவின் காரணமேயானாலும், இந்த போராட்டத்தின் தன்மையை, நாட்டுமக்கள் எப்படிப் புரிந்து கொள்கிறார்கள் என்பது சிறப்பான சிந்தனைக்குரியதாகும். காரணம் மிக மிக அற்பமானது, அரசின் நிலை, பிரச்னையை ஆராய்கிறேன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்புக்குப் பிறகும் போராட்டத்தை வன்முறை வழியில் திருப்பிவிட்டவர்கள், நாட்டின் அமைதியில் நம்பிக்கையற்றவர்கள் என்றே கருதவேண்டும்! ஆளும் கட்சியாக இருந்தவர்கள், குறிப்பாகத் தமிழ் நாட்டில் பிரதான எதிர்க் கட்சியாக இருப்பவர்கள், மற்ற கட்சியினருக்கு தாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும் என்ற மரபை மதியாதவர்கள் அல்லது இனி என்றென்றுமே தாம் மீண்டும் பதவிப் பொறுப்பு வரப் போவதில்லை என்ற எண்ணம் படைத்தவர்கள் ஆக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் துணைக் கண்டத்தின் அரசியலை, உலக நாடுகளின் கேலிக் கூத்துக்கு எடுத்துக் காட்டப்பயன்படுத்திவிடுமோ என்பதைச் சொல்லிவைக்கத்தான் வேண்டுமா''

எழுதி முடித்துவிட்டார் மிஸ்டர் அப்போலோ! காங்கிரஸ் நடவடிக்கையை நினைத்துக்கொண்டால், உடலும் சோர்ந்துபோகும்; உள்ளமும் தளர்ந்து போகுமில்லையா? ஓய்வெடுக்கப் போய்விட்டார் அவர்!

★

## கோபாலன் கூறுகிறார்!

நிலப்பறி இயக்கம் பற்றி டெல்லியிலுள்ள வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக்கமிட்டி ஒரு சுற்றறிக்கைவெளியிட்டுள்ளது. அதில் இந்தப் போராட்டம் வெறும் பிரசாரத்திற்காகவே நடத்தப்படுவது என்று கூறப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கையின் பிரதி ஒன்றை நான் அடைந்துள்ளேன். அதை வைத்துப்பார்க்கையில், வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி, நிலப்பறியில் தீவிரமாக இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பெரிதாக எக்காளம் ஊதப் படுகிற இந்த நடவடிக்கை, போலியானது; வெட்ககரமானது.

—A. K. கோபாலன் (செய்தியாளர்களிடையே பேசியது.)

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ.இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது